அனைத்து விடயங்களும் மக்களுக்காகவே
சுபீட்சம்
SUPEEDSAM
EVERYTHING FOR PEOPLE

# சுபீட்சம்

நிகழ்நிலை பத்திரிகை; அனைத்து விடயங்களும் மக்களுக்காகவே

e-Paper | 29 புதன்கிழமை ஜூலை 2026 | 29 Wednesday July 2026 | Switzerland Edition

Food is our trade
World is our Market
Sai Trader GmbH since 1991
Importeur für frische, Gemüse | Früchte & Fische
Fresh Vegetables • Fruits • Fish
Importer of Fresh, Quality Food Products
Aufeldstrasse 9,
5300 Turgi, Switzerland.
+41 44 885 66 50
+41 79 218 70 75
saitrader.import@gmail.com
www.saitrader.ch
உயர்தரமான புதிய, காய்கறிகள் | பழங்கள் | மீன்கள் | திருப்தியான சேவை
மேலதிக தகவலுக்கு
www.saitrader.ch

## நெருக்கடி காலங்களில் நம்மைத் தாங்குவது நமது மதிப்புகளும் நம்பிக்கையும்தான்

### சுவிஸ் ஜனாதிபதி கீ பார்மலின்



நெருக்கடி காலங்களில் நம்மைத் தாங்குவது நமது மதிப்புகளும் நம்பிக்கையும்தான்; அவையே எல்லைகளைத் தாண்டி நம்மை ஒன்றிணைக்கின்றன என சுவிஸ் ஜனாதிபதி கீ பார்மலின் சுவிட்சர்லாந்தின் தேசிய தினமான ஆகஸ்ட் 1ஐ முன்னிட்டு வெளிநாடுகளில் வாழும் சுமார் 8 இலட்சத்து 40 ஆயிரம் சுவிஸ் குடிமக்களுக்கு அனுப்பிய

மிகுதி 03 ஆம் பக்கத்தில்...



## தமிழ் சமூகத்தினர் அயலுறவை நட்பாகவும் சமூக ஒற்றுமையாகவும் மாற்றிய சிறந்த எடுத்துக்காட்டாக விளங்குகின்றனர்

### ஜெர்மனி ஜனாதிபதி ஃபிராங்க்வால்டர் ஸ்டைன்மையர்

ஜெர்மனியிலும் ஐரோப்பாவிலும் தமிழ் சமூகத்தினர் அயலுறவை நட்பாகவும் சமூக ஒற்றுமையாகவும் மாற்றிய சிறந்த எடுத்துக்காட்டாக விளங்குகின்றனர் என ஜெர்மனியின் ஹாம் நகரில் நடைபெற்ற இந்து சமய மகா ஆலயத் திருவிழாவில் கலந்துகொண்ட ஜெர்மனி ஜனாதிபதி ஃபிராங்க்வால்டர் ஸ்டைன்மையர், தெரிவித்தார்.

மிகுதி 03 ஆம் பக்கத்தில்...

## காட்டுத்தீ அபாயம் அதிகரிப்பு; தீயணைப்பு விமானங்களை வாங்க சுவிட்சர்லாந்து திட்டமில்லை



பேர்ன்: காலநிலை மாற்றம் காரணமாக சுவிட்சர்லாந்தில் காட்டுத்தீ அபாயம் அதிகரித்து வரும் நிலையில், பெரிய தீயணைப்பு விமானங்களை வாங்கும் திட்டம் தற்போது இல்லை என்று கூட்டாட்சி அரசு மீண்டும் உறுதிப்படுத்தியுள்ளது.

மிகுதி 03 ஆம் பக்கத்தில்...



NOLIMIT ONE
GmbH
ZUVERLÄSSIG. SAUBER. PÜNKTLICH.
IHR PARTNER FÜR JEDE AUFGABE.
REINIGUNG.
TRANSPORT.
UMZUGSHILFE.
ALLES AUS EINER HAND – FÜR PRIVAT UND GEWERBE.
REINIGUNG
Sauberkeit, auf die Sie sich verlassen können.
TRANSPORT
Sicher, schnell und zuverlässig ans Ziel.
UMZUGSHILFE
Wir unterstützen Sie beim Umzug – stressfrei und effizient.
ZUVERLÄSSIG
Termingerecht und vertrauensvoll
ERFAHRENES TEAM
5–10 motivierte Mitarbeitende
FLEXIBEL
Kurzfristig einsatzbereit
FAIRE PREISE
Top Qualität zu fairen Konditionen
WARUM NOLIMIT ONE?
Professionelle Arbeit & höchste Qualität
Moderne Ausrüstung & 2 Nutzfahrzeuge
Privatkunden, Firmen & Verwaltungen
Individuelle Lösungen für Ihren Bedarf
Termingerecht & zuverlässig
CRAFTER
MASTER
JETZT ANFRAGEN
Wir sind für Sie da!
Kostenlose Beratung.
078 222 2126
nolimitone26@gmail.com
Ostschweiz
Unterwegs für Sie in der Region
Jeder Auftrag wird mit Sorgfalt und Respekt ausgeführt
Nachhaltig
Umweltbewusst handeln für eine saubere Zukunft
No Limit One – wir machen den Unterschied.
www.nolimitone.ch




தமிழின் குரலாய்
அக்கினி fm
Akkini
CLICK HERE

## காட்டுத்தீ அபாயம் அதிகரிப்பு;....

அரசின் தகவலின்படி, காட்டுத்தீயை கட்டுப்படுத்துவதற்கு முதன்மையாக தனியார் நிறுவனங்களின் மற்றும் சுவிஸ் இராணுவத்தின் ஹெலிகாப்டர்களையே பயன்படுத்தும் தற்போதைய முறை தொடரும். 2025 ஆம் ஆண்டு கனடா நிபுணர்களின் ஆலோசனையுடன் தீயணைப்பு விமானங்கள் குறித்து ஆய்வு நடத்தப்பட்டாலும், சுவிட்சர்லாந்தின் மலைப்பாங்கான நில அமைப்பு காரணமாக ஹெலிகாப்டர்களே அதிக பயனுள்ளதாக முடிவு செய்யப்பட்டுள்ளது. 2023 ஆம் ஆண்டு ஆடிஞ்ஞன்ஞிட காட்டுத்தீயின் போது, சுவிஸ் இராணுவத்தின் Super கதட்ச் ஹெலிகாப்டர்கள் 500 டன்னுக்கும் அதிகமான தண்ணீரை வீசி தீயை கட்டுப்படுத்த உதவியிருந்தன.

எனினும், நீண்ட தூரம் பரவும் பெரிய காட்டுத்தீ ஏற்பட்டால், தற்போதைய ஹெலிகாப்டர் அமைப்புக்கு வரம்புகள் இருப்பதாக நிபுணர்கள் எச்சரித்துள்ளனர். பெரிய தீயணைப்பு விமானங்கள் ஒரே நேரத்தில் 60,000 லிட்டர் வரை தண்ணீர் வீச முடிந்தாலும், அவற்றை இயக்க போதுமான அளவிலான ஏரிகள் சுவிட்சர்லாந்தில் மிகக் குறைவாக உள்ளன.

இதனால், அதிக செலவு, பராமரிப்பு, விமானிகள் பயிற்சி மற்றும் நாட்டின் புவியியல் அமைப்பு ஆகிய காரணங்களால், சுவிட்சர்லாந்து தற்போது தனித்த தீயணைப்பு விமானங்களை வாங்குவதற்கு பதிலாக, ஹெலிகாப்டர் திறனை மேலும் வலுப்படுத்தும் அணுகுமுறையையே பின்பற்றி வருகிறது.

## தமிழ் சமூகத்தினர் அயலுறவை நட்பாகவும்...

ஜெர்மனியில் வாழும் இந்து மற்றும் தமிழ் சமூகத்தினரின் பங்களிப்பை உயர்வாகப் பாராட்டியதுடன், மத நல்லிணக்கம், சமூக ஒருங்கிணைப்பு மற்றும் பரஸ்பர மரியாதையின் அவசியத்தை வலியுறுத்தினார்.

தமது உரையின் தொடக்கத்தில், பெர்லினில் நடைபெற்ற Christopher Street Day (CSD) விழாவை இலக்காகக் கொண்டு நடத்தப்பட்டதாகக் கூறப்படும் தாக்குதலில் உயிரிழந்த பெண்ணுக்கும் காயமடைந்தவர்களுக்கும் ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்த அவர், அந்தத் தாக்குதல் ஜெர்மனியின் திறந்த மற்றும் ஜனநாயக சமூகத்தின் மீது நடத்தப்பட்ட தாக்குதலாகக் கருதப்பட வேண்டும் என்றார்.

இலங்கையின் உள்நாட்டுப் போரால் 1980களில் ஜெர்மனிக்கு அகதிகளாக வந்த தமிழர்கள், இன்று வட ரைன்-வெஸ்ட்பாலியா உள்ளிட்ட பகுதிகளில் புதிய வாழ்வை உருவாக்கி, தங்களின் உழைப்பு, கலாசாரம் மற்றும் சமய மரபுகளால் ஜெர்மன் சமூகத்தின் ஓர் அங்கமாக மாறியுள்ளதாக ஜனாதிபதி பாராட்டினார். ஜெர்மனியில் தற்போது ஒரு இலட்சத்திற்கும் அதிகமான இந்துக்கள் வாழ்கின்றனர் என்றும், ஹாம் நகரிலுள்ள ஸ்ரீ காமாட்சி அம்மன் ஆலயம் அந்த சமூகத்தின் வளர்ச்சிக்கும் அர்ப்பணிப்பிற்கும் சின்னமாக விளங்குவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

'இன்று நமது நாட்டின் மத வாழ்வு எவ்வளவு செழுமையும் பன்முகத்தன்மையும் கொண்டதாக வளர்ந்துள்ளது என்பதை இந்த ஆலயத்தில் உணர முடிகிறது. இந்து சமயம் அந்தப் பன்முகத்தன்மையின் ஓர் அங்கமாகும்' என்று அவர் தெரிவித்தார்.

அரசியலமைப்புச் சட்டம் அனைத்து மதங்களையும், மதச் சுதந்திரத்தையும், மனித கண்ணியத்தையும் பாதுகாக்கிறது என்பதை வலியுறுத்திய அவர், ஒவ்வொருவரும் தமது மதத்தை சம உரிமையுடன் வெளிப்படையாகக் கடைப்பிடிக்கக்கூடிய சூழலை அனைவரும் இணைந்து பாதுகாக்க வேண்டும் என்றார்.

மேலும், ஹாம் நகரம் பல்வேறு மதங்களும் கலாசாரங்களும் இணக்கமாக வாழக்கூடிய சிறந்த முன்னுதாரணமாக திகழ்கிறது என்றும், ஜெர்மனியிலும் ஐரோப்பாவிலும் தமிழ் சமூகத்தினர் அயலுறவை நட்பாகவும் சமூக ஒற்றுமையாகவும் மாற்றிய சிறந்த எடுத்துக்காட்டாக விளங்குகின்றனர் என்றும் பாராட்டினார்.

மதங்களுக்கு இடையேயான உரையாடல், புரிந்துணர்வு மற்றும் சமூக நல்லிணக்கத்திற்காக பணியாற்றும் அனைவருக்கும் நன்றி தெரிவித்த ஜனாதிபதி, காமாட்சி அம்மனின் அருள் அனைவரின் எதிர்கால நல்வாழ்வையும் நம்பிக்கைகளையும் நிறைவேற்றட்டும் என வாழ்த்தி தனது உரையை நிறைவு செய்தார்.

அமெரிக்கா-ஈரான் பதற்றம் எதிரொலி: சுவிட்சர்லாந்தில் எரிபொருள் விலை இரண்டாண்டு உச்சம்

அமெரிக்கா-ஈரான் இடையிலான மோதல் மீண்டும் தீவிரமடைந்துள்ள நிலையில், சுவிட்சர்லாந்தில் பெட்ரோல் மற்றும் டீசல் விலைகள் கடந்த இரண்டு ஆண்டுகளில் இல்லாத அளவுக்கு உயர்ந்துள்ளன. இந்த ஆண்டு பிப்ரவரி முதல் நீடித்து வரும் மத்திய கிழக்கு பதற்றத்தின் காரணமாக, சுவிட்சர்லாந்தில் எரிபொருள் விலைகள் 17 முதல் 20 சதவீதம் வரை அதிகரித்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இரு நாடுகளும் முன்னர் புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொண்டதைத் தொடர்ந்து, ஹோர்முஸ் நீரிணை வழியாக கப்பல் போக்குவரத்து மீண்டும் சீரடைந்ததால் விலைகள் ஓரளவு குறைந்திருந்தன. ஆனால் சமீபத்தில் பதற்றம் மீண்டும் அதிகரித்து, ஹோர்முஸ் நீரிணை மூடப்பட்டதை அடுத்து உலகளாவிய எண்ணெய் விநியோகத்தில் பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

Touring Club Switzerland (TCS) வெளியிட்ட தகவலின்படி, ஜூலை 25 முதல் Bleifrei 95 பெட்ரோலின் சராசரி விலை லிட்டருக்கு 1.92 பிராங்கிலிருந்து 1.96 பிராங்காக உயர்ந்துள்ளது. Bleifrei 98 பெட்ரோல் 2.03 இலிருந்து 2.07 பிராங்காகவும், டீசல் 2.10 இலிருந்து 2.14 பிராங்காகவும் அதிகரித்துள்ளது.

மத்திய கிழக்கின் நிலைமை மேலும் மோசமடைந்தால், சுவிட்சர்லாந்தில் எரிபொருள் விலை இன்னும் உயரக்கூடும் என சந்தை ஆய்வாளர்கள் எச்சரித்துள்ளனர்.

## நெருக்கடி காலங்களில் நம்மைத் தாங்குவது ....

வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளார். 'சுவிட்சர்லாந்து தனது பலத்தை அதன் நிலைத்தன்மை, ஜனநாயக மதிப்புகள் மற்றும் மக்களிடையேயான நம்பிக்கையிலிருந்து பெறுகிறது' என்றும் தெரிவித்துள்ளார்.

இந்த ஆண்டு CransMontana பகுதியில் ஏற்பட்ட பேரழிவு தீ விபத்தும், உலகம் முழுவதும் நீடித்து வரும் போர்களும் நெருக்கடிகளும் மக்களிடையே ஒற்றுமையின் அவசியத்தை மேலும் உணர்த்தியதாக அவர் குறிப்பிட்டார். CransMontana பேரழிவின் போது அண்டை நாடுகளின் ஒத்துழைப்பால் பல படுகாயமடைந்தவர்களுக்கு அவசர சிகிச்சை அளிக்க முடிந்தது என்றும், சர்வதேச ஒத்துழைப்பு நெருக்கடி காலங்களில் மிகவும் முக்கியமானது என்பதை அந்த அனுபவம் நிரூபித்ததாகவும் அவர் கூறினார்.

மேலும், சர்வதேச சட்டம் மற்றும் சுதந்திர வர்த்தகத்தின் மீது உலகளவில் அழுத்தங்கள் அதிகரித்தாலும், அவற்றை பாதுகாக்கும் மனப்பான்மை பல நாடுகளில் மீண்டும் வலுப்பெற்று வருவதாகவும் அவர் தெரிவித்தார். உலகம் வேகமாக மாறிக்கொண்டிருந்தாலும், ஜனநாயகம், சுதந்திரம் மற்றும் நிலையான மதிப்புகளே சுவிட்சர்லாந்தின் அடித்தளமாகத் தொடர்கின்றன என்றும், அவற்றை தேசிய தினத்தில் அனைவரும் பெருமையுடன் கொண்டாட வேண்டும் என்றும் ஜனாதிபதி வலியுறுத்தினார்.

வெளிநாடுகளில் வாழும் அனைத்து சுவிஸ் மக்களுக்கும் பாதுகாப்பு, நல்வாழ்வு மற்றும் இனிய தேசிய தின வாழ்த்துகளைத் தெரிவித்தார்.



# ஆர்காவ் கான்டனில் முழுமையான தீ மூட்டத் தடை

சுவிட்சர்லாந்தின் ஆர்காவ் (Aargau) கான்டன் முழுவதும் ஜூலை 28 செவ்வாய்க்கிழமை நண்பகல் 12.00 மணி முதல் வெளிப்புறங்களில் முழுமையான தீ மூட்டத் தடை அமுலுக்கு வருகிறது.

கடும் வெப்பம் மற்றும் நீடித்த வறட்சியால் நிலம், வயல்கள், மரங்கள் மற்றும் புதர்கள் அதிகளவில் காய்ந்து காணப்படுவதால், காட்டுத் தீ அபாயம் மேலும் அதிகரித்துள்ளதாக கான்டன் அரசு தெரிவித்துள்ளது.

இந்தத் தடையின் கீழ், தேசிய தினமான ஆகஸ்ட் 1-ஐ முன்னிட்டு பட்டாசுகள் வெடிப்பதும், பாரம்பரிய நெருப்பு ஏற்றுவதும், சிறிய பட்டாசுகள் (Zuckerst5cke) பயன்படுத்துவதும் முழுமையாகத் தடைசெய்யப்பட்டுள்ளது.

எனினும், எரிவாயு (Gas) மற்றும் மின்சார (Electric) கிரில்களை பயன்படுத்தி சமைப்பதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. ஆனால், சுற்றுப்புறத்தில் தீ பரவும் அபாயம் ஏற்படாதவாறு மிகுந்த கவனம் செலுத்துமாறு அதிகாரிகள் கேட்டுக்கொண்டுள்ளனர்.

இந்தத் தடை போதுமான மழை பெய்யும் வரை அமுலில் தொடரும் என்றும், வானிலை நிலைமையைப் பொறுத்தே பின்னர் அது நீக்கப்படும் என்றும் ஆர்காவ் கான்டன் அரசு அறிவித்துள்ளது.

# சுவிஸ் பங்குச் சந்தை புதிய உச்சம்

## SMI வரலாற்றுச் சாதனை

மத்திய கிழக்கில் பதற்றம் தணியும் என்ற நம்பிக்கை முதலீட்டாளர்களிடையே அதிகரித்ததைத் தொடர்ந்து, சுவிட்சர்லாந்து பங்குச் சந்தை திங்கட்கிழமை புதிய வரலாற்று உச்சத்தை எட்டியது.

சுவிஸ் முன்னணி பங்குக் குறியீடான SMI (Swiss Market Index) 0.7 சதவீதம் உயர்ந்து 14,421 புள்ளிகளில் வர்த்தகத்தை நிறைவு செய்தது. வர்த்தக நேரத்தில் அது 14,472 புள்ளிகளை எட்டியதன் மூலம் புதிய அனைத்துக்கால சாதனையைப் பதிவு செய்தது.

அமெரிக்கா மற்றும் ஈரான் இடையே போர் நிறுத்தம் அமலுக்கு வந்துள்ளதுடன், பிரச்சினைக்கு இராஜதந்திர தீர்வு கிடைக்கும் என்ற எதிர்பார்ப்பு சந்தைகளில் நேர்மறையான தாக்கத்தை ஏற்படுத்தியது. இதன் காரணமாக சர்வதேச எண்ணெய் விலையும் குறைந்தது.

அதேவேளை, அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் டிரம்ப், பேச்சுவார்த்தைகள் நடைபெற்று வருவதாகவும், அவை தோல்வியடைந்தால் மீண்டும் கடுமையான இராணுவ நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்றும் எச்சரித்துள்ளார்.

இந்த வாரத்தில் சுவிட்சர்லாந்தின் சுமார் 30 நிறுவனங்கள் தங்களது நிதி முடிவுகளை வெளியிடவுள்ளன. மேலும், புதன்கிழமை வெளியாகவுள்ள அமெரிக்க மத்திய வங்கியின் (Fed) வட்டி விகித அறிவிப்பையும் முதலீட்டாளர்கள் ஆவலுடன் எதிர்பார்த்து வருகின்றனர்.

பங்குகளில் குடிடுச் (3.5%), Amrize (1.6%), மருந்துத் துறை நிறுவனங்களான Roche (1.4%) மற்றும் Novartis (1.3%) ஆகியவை அதிக லாபம் கண்டன. அதேவேளை, Khne+Nagel பங்கு 1.4 சதவீதம் சரிந்து, அன்றைய தினத்தின் மிகப் பெரிய சரிவைப் பதிவு செய்தது.


ellaalan Fresh
Zürich நகரில் ஞாயிற்றுக்கிழமைகளிலும்
உங்களுக்குத்தேவையான
இறைச்சி, மீன், அரிசி, மற்றும்
உடனடி மரக்கறிகள், மலிகைப்பொருட்களை
பெறவேண்டுமா எங்களிடம் வாருங்கள்.
Moteren Strasse 9,
8005 Zürich.
TEL
044 543 48 84
ஞாயிற்றுக்கிழமைகளிலும்
திறந்திருக்கும்!
FRESH QUALITY BEST PRICE
Freshness You Can Trust, Quality You Deserve!


TAMIL ECOAM STEDO SWISS TAMIL ECONOMIC ORGANIZATION
STEDO
SWISS TAMIL ECONOMICS
DEVELOPMENT ORGANIZATION
உழைப்பால் இணைவோம்,
உயர்வாள் நிமிர்வோம்!
சுவிட்சர்லாந்து வாழ் தமிழ் வர்த்தகப் பெருமக்கள்,
இளம்தொழில்முனைவோர் மற்றும் புதிய
யோசனைகளுடன் முதலிட்டாளர்களை
ஒன்றிணைக்க செயற்படும் STEDO வில்
நீங்கள் இன்னும்
இணைந்து கொள்ளவில்லையா?
STEDOவில் இணைவோம் சாதிப்போம்
வணிக இணைப்பு
வாய்ப்புகள்
இளம் தொழில்
முனைவோருக்கு
ஆதரவு
புதிய யோசனைகளுடன்
முதலிட்டாளர்களுக்கான
வாய்ப்புகள்
தொடர்புகளுக்கு
+41 79 591 05 55
+41 79 218 70 75
www.stedo.ch
hello@stedo.ch
இணைவோம்! வளர்வோம்! உலகம் நோக்கி முன்னேறுவோம்!



# சூரிசில் இளம் கலைஞர்களுக்கான புதிய கலாசார மையம்

சூரிச் நகர மையத்தில் அமைந்துள்ள EWZ&Unterwerk Selnau கட்டிடம், வரும் செப்டம்பர் மாதம் முதல் ஓராண்டு காலத்திற்கு இளம் கலைஞர்களுக்கான தற்காலிக கலாசார மற்றும் கலை மையமாக மாற்றப்பட உள்ளது.

இந்தத் திட்டத்தை ‘‘Haus im Haus‘‘ என்ற இளம் கலைஞர்களின் கூட்டமைப்பு முன்னெடுக்கவுள்ளது. கலை உலகில் புதிதாக உருவெடுத்து வரும் கலைஞர்களுக்கு தங்கள் படைப்புகளை வெளிப்படுத்தவும், குறைந்த செலவில் பணியிடங்களை (Ateliers) பயன்படுத்தவும் இந்தத் திட்டம் வாய்ப்பளிக்கும்.

திட்டத்தின் ஒரு பகுதியாக, தேர்வுக் குழு இல்லாத திறந்த கலைக் கண்காட்சிகள், விருந்தினர் கண்காட்சிகள் மற்றும் கருப்பொருள் அடிப்படையிலான காட்சிகள் நடத்தப்படவுள்ளன. இளம் கலைஞர்களை ஊக்குவிக்கும் நோக்கில், வாடகை, பராமரிப்பு மற்றும் கட்டிட இயக்கச் செலவுகளை சூரிச் நகராட்சி முழுமையாகத் தள்ளுபடி செய்துள்ளது. கலைஞர்கள் மின்சாரம் மற்றும் நீர் கட்டணங்களை மட்டுமே செலுத்த வேண்டியுள்ளது.

முன்னதாக ஆண்டுக்கு சுமார் 100,000 சுவிஸ் பிராங்க் செலவாகும் கட்டணம் நிர்ணயிக்கப்பட்டிருந்த நிலையில், கலைஞர்களின் எதிர்ப்பும் பேச்சுவார்த்தைகளும் தொடர்ந்து, இறுதியில் நகராட்சி கட்டணமில்லா பயன்பாட்டுக்கு ஒப்புதல் வழங்கியுள்ளது.

2025 ஆம் ஆண்டு வரை இந்தக் கட்டிடத்தில் Museum Haus Konstruktiv இயங்கி வந்தது. தற்போது அந்த அருங்காட்சியகம் L5wenbru&Areal பகுதிக்கு இடம்பெயர்ந்துள்ளது. இதற்கிடையில், 2027 இலையுதிர் காலத்தில் இந்தக் கட்டிடத்தில் ‘‘Cool City‘‘ வெப்ப ஆற்றல் மையம் அமைக்கும் பணிகளை சூரிச் நகரம் தொடங்க திட்டமிட்டுள்ளது

# சுவிஸ்- ஐரோப்பிய ஒன்றிய ஒப்பந்தங்களுக்கு SVP எதிர்ப்பு



புதிய சுவிஸ்-ஐரோப்பிய ஒன்றிய ஒப்பந்தங்கள் நடைமுறைக்கு வந்தால், எல்லைக் கட்டுப்பாடுகள் பலவீனமடைந்து குற்றச்செயல்கள் அதிகரிக்கும் என சுவிஸ் மக்கள் கட்சி (SVP) குற்றஞ்சாட்டியுள்ளது. எனினும், இது அந்தக் கட்சியின் அரசியல் நிலைப்பாடாகும்.



# நாய் சிறுநீரைக் கழுவ புதிய விதி; Zrich நாய் உரிமையாளர்கள் எதிர்ப்பு

Ticino மாநிலத்தின் Chiasso நகரில் ஆகஸ்ட் நடுப்பகுதி முதல் புதிய விதிமுறை அமுலுக்கு வருகிறது. நாய்களை நடைப்பயிற்சிக்கு அழைத்துச் செல்பவர்கள் தண்ணீர் போத்தல் எடுத்துச் செல்ல வேண்டும். நாய் பொது இடத்தில் சிறுநீர் கழித்தால், அந்த இடத்தில் தண்ணீர் ஊற்றிச் சுத்தப்படுத்த வேண்டும்.

இந்த விதிமுறையை Zrich நகர நாய் உரிமையாளர்கள் விமர்சித்துள்ளனர். பல நாய்களை ஒரே நேரத்தில் அழைத்துச் செல்பவர்கள் அதிகளவு தண்ணீரை எவ்வாறு எடுத்துச் செல்வார்கள் என்றும் அவர்கள் கேள்வி எழுப்பியுள்ளனர். பொது இடங்களிலும் கட்டடங்களின் நுழைவாயில்களிலும் சிறுநீர் கழிக்கும் மனிதர்களுக்கு எதிராக என்ன நடவடிக்கை எடுக்கப்படுகிறது என்றும் சிலர் கேட்டுள்ளனர்.

நாயின் மலத்தை அகற்றுவது அவசியம் என்பதை ஏற்றுக்கொண்டாலும், சிறுநீரைக் கழுவும் விதிமுறையை நடைமுறையில் கண்காணித்து அமுல்படுத்துவது கடினம் என அவர்கள் தெரிவித்துள்ளனர். சிலர் அபராதம் விதிக்கப்பட்டாலும் விதியைப் பின்பற்றமாட்டோம் என்றும் கூறியுள்ளனர்.

# ஜெனீவாவில் ஒற்றை- இரட்டை இலக்க வாகனப் போக்குவரத்து யோசனை



வெப்ப அலைக் காலங்களில் போக்குவரத்தைக் குறைப்பதற்காக, இரட்டை இலக்கப் பதிவெண் கொண்ட வாகனங்களை இரட்டை இலக்கத் திகதிகளிலும், ஒற்றை இலக்க வாகனங்களை ஒற்றை இலக்கத் திகதிகளிலும் மட்டும் அனுமதிக்க வேண்டும் என உள்ளூர் நாடாளுமன்ற உறுப்பினர் Julien Nicolet&dit&Flix முன்மொழிந்துள்ளார்.




# சூரிச் ஊழியர்களின் நோய்விடுப்பு குறைந்தது

# இளைஞர்களிடம் பெரிய மாற்றம்



சூரிச் மாகாண ஊழியர்கள் 2025ஆம் ஆண்டில் சராசரியாக 7.1 நாட்கள் நோய்விடுப்பு எடுத்துள்ளனர். 2024ஆம் ஆண்டில் இது எட்டு நாட்களாக இருந்தது. பெண்கள் சராசரியாக ஒன்பது நாட்களும் ஆண்கள் 6.3 நாட்களும் பணிக்கு வரவில்லை.

24 வயதுக்குட்பட்ட ஊழியர்களின் நோய்விடுப்பு 11.2 நாட்களிலிருந்து 7.8 நாட்களாகக் கணிசமாகக் குறைந்துள்ளது. முந்தைய ஆண்டுகளில் இளைஞர்களின் நீண்டகால விடுப்புகளுக்கு மனநலப் பிரச்சினைகளும் முக்கிய காரணமாக இருந்தன.

நோய்விடுப்பு குறைவதற்கான காரணம் இன்னும் உறுதியாகத் தெரியவில்லை. 2025இல் காய்ச்சல் பரவல் மிதமாக இருந்ததும், நிறுவனங்களும் பாடசாலைகளும் சுகாதாரப் பாதுகாப்பு மற்றும் நோய்த்தடுப்பு நடவடிக்கைகளை அதிகரித்ததும் காரணமாக இருக்கலாம்.

அதேநேரம், பொருளாதார நிச்சயமின்மை மற்றும் வேலை இழப்புக் குறித்த அச்சம் காரணமாக, சிலர் உடல்நலம் பாதிக்கப்பட்டிருந்தாலும் பணிக்குச் செல்லக்கூடும் என்றும் அதிகாரிகள் தெரிவிக்கின்றனர். இருப்பினும், இதை உறுதிப்படுத்த மேலும் நீண்டகால ஆய்வுகள் தேவை என சூரிச் மாகாண பொருளாதாரத் திணைக்களம் கூறியுள்ளது.



# சூரிச் மருத்துவர் மீது பாலியல் துஷ்பிரயோகக் குற்றச்சாட்டு

சூரிச்சில் பணியாற்றிய 65 வயதான மருத்துவர் ஒருவர், பல ஆண்டுகளாக நோயாளிகளுக்கு மயக்க மருந்து கொடுத்து, அவர்களை இரகசியமாகப் படம் பிடித்து பாலியல் துஷ்பிரயோகம் செய்ததாகக் கடுமையான குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டுள்ளன.

சிகிச்சை அறையில் தன்னை நோக்கியபடி வைக்கப்பட்டிருந்த கேமராவை நோயாளி ஒருவர் கண்டுபிடித்ததைத் தொடர்ந்து இவ்விவகாரம் வெளிச்சத்துக்கு வந்தது. பொலிஸார் கைப்பற்றிய சாதனங்களில் ஆடையற்ற பெண்களின் ஏராளமான புகைப்படங்களும் காணொளிகளும் இருந்ததாகக் கூறப்படுகிறது. பாதிக்கப்பட்டவர்களில் குறைந்தது ஒருவர் சிறுமி என்றும் தகவல்கள் தெரிவிக்கின்றன. குறித்த மருத்துவர் முன்னர் பணியாற்றிய ஆஸ்திரியாவின் கிராஸ் நகரிலும் இதேபோன்ற குற்றச்சாட்டுகள் தொடர்பாக விசாரணை நடைபெறுகிறது. கைப்பற்றப்பட்ட பதிவுகள் 2012ஆம் ஆண்டு வரையானவை என ஆஸ்திரிய ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

மருத்துவர் ஜூலை மாதத் தொடக்கத்திலிருந்து சூரிச்சில் விசாரணைக் காவலில் வைக்கப்பட்டுள்ளார். அவர் குற்றச்சாட்டுகளை மறுத்துள்ள நிலையில், வழக்கு தொடர்பான விசாரணைகள் தொடர்கின்றன. நீதிமன்றத் தீர்ப்பு வெளியாகும்வரை குற்றமற்றவர் என்ற சட்டக் கோட்பாடு பொருந்தும்.

# மலை ஏறுபவர்களுக்கு எச்சரிக்கை



கடும் வெப்பம் காரணமாக பாறைகள் சரிதல், உறைபனி உருகுதல், பனிப்பிளவுகள் வெளிப்படுதல் மற்றும் நிரந்தர உறைநிலம் தளர்தல் போன்ற அபாயங்கள் அதிகரித்துள்ளன.

இதனால் Matterhorn உள்ளிட்ட உயரமான மலைகளில் சில வழித்தடங்களைத் தற்போது தவிர்க்குமாறு சுவிஸ் அல்பைன் கிளப் அறிவுறுத்தியுள்ளது.




# பேர்ன் நகரில் அதிக வருமானம் பெற்ற கட்சியாக SP முதலிடம்

பேர்ன் நகரில் அதிக வருமானம் பெற்ற கட்சியாகசோசலிச ஜனநாயகக் கட்சி முதலிடம்

பேர்ன் நகரில் 2025ஆம் ஆண்டு அதிக வருமானம் பெற்ற அரசியல் கட்சியாக சோசலிச ஜனநாயகக் கட்சி (SP) பதிவாகியுள்ளது. குக 300,700 பிராங்குகளையும், பசுமைக் கூட்டணி (GB) 221,400 பிராங்குகளையும் பெற்றுள்ளன. தொடர்ந்து ஊஈக 111,700, குஙக 62,700, GFL 52,600 மற்றும் GLP 45,100 பிராங்குகளைப் பெற்றுள்ளன.

பேர்ன் நகர சபையில் பிரதிநிதித்துவம் பெற்ற கட்சிகள், 2022 முதல் தமது வருடாந்த வருமானம், செலவுகள் மற்றும் பிரசார நிதி விவரங்களை வெளியிடுவது கட்டாயமாகும். 5,000 பிராங்குகள் அல்லது அதற்கு அதிகமான நன்கொடைகளை வழங்குவோரின் பெயர்களும் வெளியிடப்பட வேண்டும்.

2025ஆம் ஆண்டில் பதிவான ஒரேயொரு பெருநன்கொடை, தனிநபர் ஒருவரால் பசுமைக் கூட்டணிக்கு வழங்கப்பட்ட 5,000 பிராங்குகளாகும். குஙக வெளிப்படுத்தல் வரம்புக்கு ஒரு பிராங்கு குறைவான 4,999 பிராங்கு நன்கொடையையும் பெற்றுள்ளது.

மொத்த நன்கொடைகளில் குஙக 23,400 பிராங்குகளுடன் முதலிடம் பிடித்துள்ளது. தொடர்ந்து பசுமைக் கூட்டணி 21,000 பிராங்குகளையும் FDP 15,400 பிராங்குகளையும் பெற்றுள்ளன. சிறிய மற்றும் நடுத்தர நன்கொடைகளை அதிகமாகத் திரட்டிய கட்சியாகவும் குஙக உள்ளது.

"Tier im Fokus' கட்சி பெற்ற 7,000 பிராங்குகளும் முழுமையாக நன்கொடைகளிலிருந்து கிடைத்தவை. "Die Mitte' கட்சியின் 16,400 பிராங்கு வருமானத்தில் சுமார் 60 சதவீதம் நன்கொடைகளாகும்.

ஏனைய கட்சிகள் உறுப்பினர் கட்டணங்கள் மற்றும் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளின் பங்களிப்புகள் மூலம் பெருமளவில் நிதி பெற்றுள்ளன. பசுமைக் கூட்டணி பிரதிநிதிகளின் பங்களிப்பாக 76,000 பிராங்குகளையும், அஃ 19,200 பிராங்குகளையும், எஃக 22,500 பிராங்குகளையும் பெற்றுள்ளன. குக இதே வழியில் 24,500 பிராங்குகளைப் பெற்றுள்ளது.

உறுப்பினர் கட்டணங்களில் குக 258,400 பிராங்குகளுடன் முதலிடம் வகிக்கிறது. இது அதன் மொத்த வருமானத்தில் 86 சதவீதமாகும். பசுமைக் கூட்டணி 111,200 பிராங்குகளையும் ஊஈக 60,400 பிராங்குகளையும் உறுப்பினர் கட்டணங்களாகப் பெற்றுள்ளன.



# ஆர்காவ் மாநிலம் கோப்லென்ஸில் காட்டுத்தீ - தீயணைப்புப் படையின் துரித நடவடிக்கையால் பெரும் சேதம் தவிர்ப்பு

ஆர்காவ் மாநிலத்தின் கோப்லென்ஸ் பகுதியில் திங்கள்கிழமை (ஜூலை 27) மாலை ஏற்பட்ட புல்வெளித் தீ (Flurbrand), அருகிலிருந்த மரக் களஞ்சியத்திற்கும் பின்னர் காட்டுப் பகுதிக்கும் பரவியதால், பெருமளவிலான தீயணைப்புப் படையினர் களமிறக்கப்பட்டனர்.

மாலை 6.30 மணியளவில், காட்டுப்பகுதியில் புகை எழுவதாக அவசர சேவை மையத்திற்கு தகவல் கிடைத்ததைத் தொடர்ந்து, D5t-tingen&Klingnau&Koblenz தீயணைப்புப் படையினர், பிராந்திய காவல்துறை மற்றும் ஆர்காவ் மாநில காவல்துறையினர் சம்பவ இடத்துக்கு விரைந்தனர்.

சுமார் 50 é 50 மீட்டர் பரப்பளவில் ஏற்பட்டிருந்த தீ, பலத்த காற்றின் காரணமாக வேகமாக பரவி, அருகிலிருந்த உலர்ந்த மரக்கட்டைகள் குவியலையும் தீப்பற்றச் செய்தது.

மேலும், தீப்பொறிகள் பறந்ததால் காட்டின் உள் பகுதியில் சுமார் 25 ஸ 30 மீட்டர் பரப்பளவில் மற்றொரு தீ விபத்தும் ஏற்பட்டது. இதில் பல மரங்கள் சேதமடைந்தன. இதையடுத்து B5ttstein&Leuggern தீயணைப்புப் படையினரும் உதவிக்காக அழைக்கப்பட்டனர்.

தீயணைப்புப் படையினரின் விரைவான நடவடிக்கையால் இரண்டு இடங்களிலும் ஏற்பட்ட தீ கட்டுக்குள் கொண்டுவரப்பட்டதுடன், மேலும் காட்டுப் பகுதிகளுக்கு தீ பரவுவதும் தடுக்கப்பட்டது.

இந்தச் சம்பவத்தில் யாருக்கும் காயம் ஏற்படவில்லை. தீ விபத்திற்கான காரணம் குறித்து ஆர்காவ் மாநில காவல்துறை தொடர்ந்து விசாரணை நடத்தி வருகிறது.






# சுவிஸ் கால்பந்து ரசிகர்களுக்கு புதிய சிக்கல்

பேர்ன்: வெளிநகரங்களில் நடைபெறும் கால் பந்து போட்டிகளுக்குச் செல்லும் ரசிகர்களுக்காக இயக்கப்படும் சில சிறப்பு ரசிகர் ரயில்களை (Fan Trains) இனி இயக்க முடியாது என சுவிஸ் கூட் டாட்சி ரயில்வே (SBB) அறிவித்துள்ளது. இந்த முடிவு கால்பந்து ரசிகர்கள் மத்தியில் கடும் அதி ருப்தியை ஏற்படுத்தியுள்ளது.

குஆஆ-யின் புதிய முடிவின்படி, வழக்கமான ரயில் சேவை முடிந்த பிறகு கூடுதலாக இயக்கப் பட்டு வந்த ரசிகர் ரயில்கள் சில இனி இயக்கப்ப டமாட்டாது.

இதனால், சனிக்கிழமை இரவு நடைபெறும் போட்டிகளுக்குப் பிறகு டிசினோ (Lugano) அல் லது வாலிஸ் (Sion) பகுதிகளுக்குச் செல்லும் ஆயிரக்கணக்கான ரசிகர்கள், அடுத்த நாள் அதிகாலை முதல் ரயில் வரும் வரை அங்கேயே காத்திருக்க வேண்டிய நிலை உருவாகலாம்.

முதற்கட்டமாக, செப்டம்பர் 12-ஆம் தேதி லுகானோவுக்கு செல்லும் யங் பாய்ஸ் (Young Boys) ரசிகர்களும், அக்டோபர் 10-ஆம் தேதி லுசேர்ன் (FC Luzern) ரசிகர்களும், செப்டம்பர் 19-ஆம் தேதி சியோன் (Sion) செல்லும் ஊஇ நுணூடிஞிட ரசிகர்களும் இந்த மாற்றத்தால் பாதிக்கப்படவுள்ளனர்.

**ஏன் இந்த முடிவு?**

இந்த சிறப்பு ரயில்களால் ஆண்டுதோறும் 4 மில்லியன் சுவிஸ் பிராங்குகளுக்கும் அதிகமான நிதி இழப்பு ஏற்படுவதாக குஆஆ தெரிவித் துள்ளது. ரசிகர் ரயில்களில் டிக்கெட் இல்லாமல் பயணிப்போர் அதிகரித்துள்ளதால் வருவாய் குறைந்துள்ளதாகவும், செலவுக் கட்டுப்பாட்டு நடவடிக்கையின் ஒரு பகுதியாக இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளதாகவும் கூறியுள்ளது.

**பாதுகாப்பு குறித்த கவலை**

சிறப்பு ரசிகர் ரயில்கள் இல்லாவிட்டால், ரசிகர் கள் வழக்கமான ரயில்களில் பல்வேறு குழுக் களாகப் பயணிக்க வேண்டியிருக்கும்.

இதனால் பாதுகாப்பு ஏற்பாடுகள் சிக்கலாகும் என்றும், காவல்துறைக்கு கூடுதல் செலவும் பணிச்சுமையும் ஏற்படும் என்றும் நிபுணர்கள் எச்சரிக்கின்றனர்.

**ரசிகர்களின் எதிர்ப்பு**

இந்த முடிவுக்கு எதிர்ப்பு தெரிவித்து, கடந்த வாரம் Grasshopper Club Zrich ரசிகர்கள் லோசான் செல்லும் வழக்கமான ரயிலில் அவசர பிரேக்கை இழுத்து, புகைப்பிடித்து போராட்டத்தில் ஈடுபட்டனர். இந்த நடவடிக்கையை பல ரசிகர் அமைப்புகளும் விமர்சித்துள்ளன.

**மாற்று வழி**

ரசிகர்கள் தனியார் ரயில்களை வாடகைக்கு எடுக்கலாம் என்று குஆஆ பரிந்துரைத்துள்ளது. ஆனால் அதற்கு அதிக செலவு ஏற்படுவதால் அது நடைமுறைக்கு சிரமமானதாகக் கருதப்படுகிறது.

இதற்கிடையில், Swiss Football League, ரசிகர் களின் பயணத்திற்கு நீடித்த தீர்வு காணும் நோக் கில் SBB மற்றும் அதிகாரிகளுடன் தொடர்ந்து பேச்சுவார்த்தை நடத்தி வருவதாக தெரிவித் துள்ளது.



# சுவிட்சர்லாந்தில் குளவி கூடுகள் 5 மடங்கு அதிகரிப்பு

சுவிட்சர்லாந்தில் கடந்த ஐந்து ஆண்டுகளில் குளவி கூடுகள் தொடர்பான புகார்கள் ஐந்து மடங்கு அதிகரித்துள்ளதாக காப்புறுதி நிறுவனம் Mobiliar வெளியிட்ட புதிய புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன.

2021 ஆம் ஆண்டில் 1,000 குடும்பங்களுக்கு 0.27 ஆக இருந்த புகார்கள், 2025 ஆம் ஆண்டில் 1.34 ஆக உயர்ந்துள்ளன. கடந்த ஆண்டு மட்டும் நாடு முழுவதும் சுமார் 5,800 குளவி கூடுகள் பதிவாகியுள்ளன. இதில் மேற்கு சுவிட்சர்லாந்திலேயே அதிக எண்ணிக்கையிலான புகார்கள் பதிவாகியுள்ளன.

வல்லுநர்களின் கருத்துப்படி, மிதமான குளிர்காலம், வறண்ட வசந்தம் மற்றும் அதிக வெப்பம் ஆகியவை குளவிகள் பெருகுவதற்கு முக்கிய காரணங்களாகும். மேலும், பூச்சி இனங்கள் குறைந்து வருவதால், குளவிகள் மனிதர்களின் உணவை நாடி குடியிருப்பு பகுதிகளுக்கு அதிகமாக வரத் தொடங்கியுள்ளன.

இருப்பினும், குளவிகள் தாவரங்களுக்கு மகரந்தச் சேர்க்கை செய்வதுடன், தீங்கு விளைவிக்கும் பூச்சிகளை கட்டுப்படுத்துவதன் மூலம் சுற்றுச்சூழல் சமநிலையைப் பேணுவதிலும் முக்கிய பங்கு வகிக்கின்றன என உயிரியல் நிபுணர்கள் தெரிவித்துள்ளனர்.

# ஆகஸ்ட் 1 முதல் குடியுரிமை நடைமுறை டிஜிட்டல் மயமாகிறது

சுவிஸ் குடியுரிமையைப் பெறுவதற்கான நிர்வாக நடைமுறைகள் ஆகஸ்ட் 1 முதல் படிப்படியாக டிஜிட்டல் மயமாக்கப்படுகின்றன.

இனி சம்பந்தப்பட்ட மாநில அதிகாரிகளுக்கும் குடிவரவு விவகாரங்களுக்கான அரச செயலகமான SEM-க்கும் இடையிலான தகவல் பரிமாற்றத்தைத் தபாலுக்குப் பதிலாக டிஜிட்டல் முறையில் மேற்கொள்ள முடியும். ZEMIS எனப்படும் மத்திய குடிவரவு தகவல் அமைப்பில் உருவாக்கப்படும் புதிய இடைமுகத்தின் ஊடாகக் குடியுரிமை விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்கும் நடைமுறையும் மேம்படுத்தப்படவுள்ளது.

முதற்கட்டமாகச் சில மாநிலங்களில் சோதனை நடத்தப்பட்ட பின்னர், ஏனைய மாநிலங்களும் இந்த அமைப்புடன் இணைக்கப்படும்.




# சூரிச் நகரப் பொலிஸில் இரகசியத் தகவல்கள் தவறாகப் பயன்படுத்தப்பட்டதாகக் குற்றச்சாட்டு

சூரிச் நகரப் பொலிஸார் இருவர் தொடர்பாக நடைபெறும் புதிய குற்றவியல் விசாரணைகள், பொதுமக்களின் தனிப்பட்ட தகவல்களின் பாதுகாப்பு குறித்து கேள்விகளை எழுப்பியுள்ளன.

பணியிலுள்ள பொலிஸ் அதிகாரி ஒருவர், இரகசிய விசாரணைத் தரவுத்தளத்தைத் தனிப்பட்ட பொழுதுபோக்குச் செயலியைப் போன்று பயன்படுத்தி, விபத்துப் படங்கள் மற்றும் அறிக்கைகளைத் தனது அறிமுகமானவர்களிடம் காண்பித்ததாகக் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

மற்றொரு பெண் பொலிஸ் அதிகாரி, தண்டனை பெற்ற குற்றவாளி ஒருவருடன் உறவு வைத்திருந்தமை தொடர்பாகவும் விசாரணை நடைபெறுகிறது. அவர் தற்போது பொலிஸ் சேவையில் இல்லை. ஆனால் தரவுகளைத் தவறாகப் பயன்படுத்தியதாகக் குற்றஞ்சாட்டப்பட்ட அதிகாரி தொடர்ந்து பணியாற்றி வருகிறார்.

2020ஆம் ஆண்டு முதல் இதுவரை சூரிச் நகரப் பொலிஸார் மூவர், உத்தியோகபூர்வ இரகசியத்தை மீறிய குற்றத்திற்காகத் தண்டிக்கப்பட்டுள்ளனர். முக்கியமான படங்கள் மற்றும் தனிப்பட்ட தகவல்களை ஊழியர்கள் தேவையின்றிப் பார்ப்பதைத் தடுக்கத் தானியங்கி பாதுகாப்பு முறை இல்லை என தகவல் வெளியிட்ட ஒருவர் குற்றஞ்சாட்டியுள்ளார்.

சுமார் 2,050 ஊழியர்களுக்கு தரவுத்தள அணுகல் இருப்பதாக நகரப் பாதுகாப்புத் துறை தெரிவித்துள்ளது. எகணிடூடிண் அமைப்பில் யார் எந்தத் தகவலைப் பார்த்தார்கள் என்ற பதிவுகள் 12 மாதங்கள் சேமிக்கப்படுகின்றன. எனினும், சந்தேகம் அல்லது குறிப்பிட்ட சம்பவம் ஏற்பட்டால் மட்டுமே அவை பரிசோதிக்கப்படுகின்றன.

குற்றஞ்சாட்டப்பட்ட பொலிஸ் அதிகாரி குற்றச்சாட்டுகளை மறுத்துள்ளார். நீதிமன்றத் தீர்ப்பு வெளியாகும்வரை குற்றமற்றவர் என்ற சட்டக் கோட்பாடு பொருந்தும்.

# பிரித்தானிய அரசியலில் தமிழர் வரலாற்றுச் சாதனை! உமா குமாரன் உதவி அமைச்சராக நியமனம்:

ஐங்கரன் விக்கினேஸ்வரா



பிரித்தானிய அரசியலில் 2026 ஆம் ஆண்டு இடம்பெற்ற அமைச்சரவை மாற்றம் பல்வேறு அரசியல் காரணங்களால் முக்கியத்துவம் பெற்றிருந்தாலும், அதில் உலகெங்கும் வாழும் தமிழர்களின் கவனத்தை அதிகம் ஈர்த்த நிகழ்வு ஈழத்தமிழ் வம்சாவளியைச் சேர்ந்த லேபர் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் உமா குமரன் (Uma Kumaran MP) வெளியுறவு, காமன்வெல்த் மற்றும் மேம்பாட்டுத் துறை அமைச்சகத்தின் (Foreign, Commonwealth and Development Office & FCDO) நாடாளுமன்ற கீழ்-செயலாளராகவும் (Parliamentary Under&Secretary of State), அதேவேளை உதவி அரசு கொறடாவாகவும் (Assistant Whip) நியமிக்கப்பட்டதுதான்.

### புலம்பெயர் தமிழ் சமூக சாதனை:

இந்த நியமனம் ஒரு தனிநபரின் அரசியல் வெற்றியாக மட்டுமே பார்க்கப்பட முடியாது. மாறாக, பல தசாப்தங்களாக கல்வி, உழைப்பு, சமூகப் பணி மற்றும் ஜனநாயக அரசியலில் தொடர்ச்சியான பங்களிப்பின் மூலம் தமது இடத்தை உறுதிப்படுத்திய தமிழர் புலம்பெயர் சமூகத்தின் கூட்டு சாதனையாக இது





புதிய நாட்டில் அவர்கள் எதிர்கொண்ட வாழ்க்கை எளிதானதல்ல. புதிய மொழி, புதிய கல்வி முறை, வேலைவாய்ப்பு சவால்கள், பொருளாதார நெருக்கடிகள், கலாச்சார வேறுபாடுகள் என எண்ணற்ற தடைகளை அவர்கள் கடந்து வந்தனர். இருப்பினும் கல்வியை முதன்மைப்ப டுத்திய அவர்கள், மருத்துவம், சட்டம், பொறியியல், தகவல் தொழில்நுட்பம், வணிகம், ஆராய்ச்சி, கல்வி மற்றும் பொது நிர்வாகம் உள்ளிட்ட பல துறை களில் சிறப்பான இடத்தைப் பெற்றனர்.

## தமிழர் அரசியல் பங்களிப்பு

இந்த சமூக முன்னேற்றத்தின் அடுத்த கட்டமாக அரசியல் பங்கேற்பு வளரத் தொடங்கியது. உள்ளூராட்சி மன்ற உறுப் பினர்கள், மேயர்கள், சமூக அமைப் புகளின் தலைவர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் என தமிழர்கள் பல்வேறு பொறுப்புகளை வகிக்கத் தொடங்கினர். இப்போது அமைச்சர் மற்றும் Assistant Whip போன்ற தேசிய அரசின் முக்கியப் பொறுப்புகளுக்கு ஈழத் தமிழர் வம்சாவ ளியைச் சேர்ந்த ஒருவர் நியமிக்கப்பட்டி ருப்பது, அந்த நீண்ட பயணத்தின் புதிய அத்தியாயமாகக் கருதப்படுகிறது.

உமா குமாரனின் அரசியல் உயர்வு, பிரித்தானிய ஜனநாயகத்தின் பல்வ கைமையையும் உள்ளடக்கத்தையும் பிரதிபலிக்கிறது. நவீன ஜனநாயகத்தில் ஒரு அரசாங்கம் மக்களின் பல்வேறு இன, மொழி, மத மற்றும் கலாச்சார அடையாளங்களை பிரதிநிதித்துவப்ப டுத்துவது மிகவும் முக்கியமானதாகக் கருதப்படுகிறது. பல்வேறு சமூகங்களை உள்ளடக்கிய தலைமைத்துவம் மட்டுமே அனைத்து குடிமக்களுக்கும் சமமான உரிமை மற்றும் நம்பிக்கையை ஏற்ப டுத்த முடியும். அந்த அடிப்படையில், தமி ழர் வம்சாவளியைச் சேர்ந்த ஒரு பெண் அரசியல்வாதி அமைச்சரவைப் பொறுப் பில் இடம்பெறுவது, பிரித்தானிய அர சியலின் திறந்த மற்றும் உள்ளடக்கிய தன்மையை வெளிப்படுத்துகிறது.

அதே நேரத்தில், இந்த நியமனம் பெண் களின் அரசியல் முன்னேற்றத்திற்கும் ஒரு முக்கியமான எடுத்துக்காட்டாகும்.

வரலாற்றில் பதிவாகிறது. பிரித்தானிய மன்னரின் உத்தியோகபூர்வ ஒப்புத லைத் தொடர்ந்து பிரதமர் அலுவலகம் இந்த நியமனத்தை அறிவித்தது. இதன் மூலம் பிரித்தானிய அமைச்சரவையில் இடம்பெற்ற முதல் ஈழத்தமிழ் வம்சாவளி நபர் என்ற வரலாற்றுச் சாதனையை உமா குமரன் படைத்துள்ளார்.

ஒரு சமூகத்தின் வளர்ச்சி அதன் பொருளாதார முன்னேற்றத்தால் மட் டும் அளவிடப்படுவதில்லை. அந்த சமூகத்தின் உறுப்பினர்கள் ஒரு நாட் டின் கொள்கை வடிவமைப்பிலும், நிர்வாகத்திலும், அரசியல் தலைமைத் துவத்திலும் பங்கேற்கத் தொடங்கும் போதுதான் அந்த சமூகத்தின் முழுமை யான ஒருங்கிணைப்பு நிகழ்ந்ததாகக் கருதப்படுகிறது. அந்த வகையில், உமா குமாரனின் இந்த நியமனம், பிரித்தா னியாவில் வாழும் ஈழத் தமிழர் சமூகத் தின் அரசியல் முதிர்ச்சியையும், ஜன நாயகத்தில் அவர்கள் பெற்றிருக்கும் நம்பிக்கையையும் பிரதிபலிக்கிறது.

பிரித்தானியாவுக்கு தமிழர்கள் பல்வேறு காலகட்டங்களில் குடிபெயர்ந் திருந்தாலும், குறிப்பாக இலங்கையில் நீண்டகாலமாக நீடித்த இனமோதல் களும் உள்நாட்டு போரும் ஆயிரக்கணக் கான தமிழர்களை பாதுகாப்புத் தேடி பிரித்தானியா உள்ளிட்ட பல மேற்கத்திய நாடுகளுக்கு இடம்பெயரச் செய்தன.



உலகின் பல ஜனநாயக நாடுகளிலும் பெண்களின் அரசியல் பிரதிநிதித்துவம் இன்னும் போதுமான அளவில் இல்லை. குறிப்பாக குடியேற்றப் பின்னணியிலிருந்து வந்த பெண்கள் தேசிய அரசியலில் உயர்ந்த பதவிகளை அடைவது மிகவும் அரிதான ஒன்றாகக் கருதப்படுகிறது. இந்நிலையில் உமா குமாரன் போன்றோர் உயர்ந்த அரசியல் பொறுப்புகளை வகிப்பது, பெண்கள் அரசியலில் முன்னேறுவதற்கான வாய்ப்புகள் விரிவடைந்து வருவதை எடுத்துக்காட்டுவதோடு, இளம் பெண்களுக்கு தன்னம்பிக்கையையும் ஊக்கத்தையும் அளிக்கிறது.

## பெண்கள் அரசியல் முன்னேற்றம்:

Assistant Whip என்ற பதவி பொது மக்களுக்கு அதிகம் அறிமுகமில்லாததாக இருந்தாலும், பிரித்தானிய நாடாளுமன்ற அமைப்பில் அது மிகவும் முக்கியமான அரசியல் பொறுப்பாகும். அரசாங்கத்தின் சட்டமன்றப் பணிகள் தடையின்றி நடைபெறுவதையும், நாடாளுமன்ற உறுப்பினர்களிடையே ஒருங்கிணைப்பை ஏற்படுத்துவதையும், அரசாங்கத்தின் சட்ட முன்மொழிவுகளுக்கு தேவையான ஆதரவை உறுதிப்படுத்துவதையும் ஙிடடிணீ அலுவலகம் மேற்கொள்கிறது. கட்சியின் ஒழுங்கை நிலைநிறுத்துவது, முக்கியமான வாக்கெடுப்புகளில் உறுப்பினர்களின் பங்கேற்பை உறுதி செய்வது, அரசாங்கத்தின் கொள்கைகள் குறித்து உறுப்பினர்களுக்கு விளக்கமளிப்பது போன்ற பல முக்கியமான பொறுப்புகளை Assistant Whip மேற்கொள்கிறார். எனவே இது ஒரு நிர்வாகப் பதவி மட்டுமல்ல அரசாங்கத்தின் செயல்திறனுக்கும் அரசியல் நிலைத்தன்மைக்கும் நேரடியாக பங்களிக்கும் முக்கியமான பொறுப்பாகும்.

அமைச்சர் பதவியும் அதே அளவிற்கு முக்கியத்துவம் வாய்ந்தது. அமைச்சர்கள் அரசின் கொள்கைகளை நடைமுறைப்படுத்துவது மட்டுமல்லாமல், புதிய கொள்கைகளை வடிவமைப்பது, அரசுத் துறைகளை மேற்பார்வையிடுவது, பொதுமக்களின் தேவைகளை அரசாங்கத்தின் முடிவுகளுடன் இணைப்பது போன்ற பல்வேறு பொறுப்புகளை வகிக்கின்றனர். எனவே அமைச்சர் பதவிக்கு நியமிக்கப்படுவது என்பது அரசியல் தலைமைத்துவத்தின் மீதான நம்பிக்கையையும் நிர்வாகத் திறனையும் அங்கீகரிப்பதாகும்.

உமா குமாரனின் இந்த உயர்வு, உலகம் முழுவதும் வாழும் தமிழர் இளைஞர்களுக்கும் ஒரு வலுவான செய்தியை வழங்குகிறது. குடியேற்றப் பின்னணி என்பது முன்னேற்றத்திற்கான தடையல்ல; மாறாக கல்வி, திறமை,




கடின உழைப்பு, சமூகப் பங்களிப்பு மற்றும் ஜனநாயகப் பொறுப்புணர்வு ஆகியவற்றின் மூலம் எந்த உயரத்தையும் அடைய முடியும் என்பதை அவரது அரசியல் பயணம் நிரூபிக்கிறது. அரசியலில் ஈடுபடுவது என்பது தேர்தலில் போட்டியிடுவதற்காக மட்டுமல்ல; சமூகத்தின் தேவைகளைப் புரிந்து கொண்டு பொது நலனுக்காக செயல்படுவதற்கான ஒரு உயரிய பொறுப்பாகும் என்பதை இந்த நியமனம் நினைவூட்டுகிறது.

பிரித்தானியாவில் வாழும் தமிழர் சமூகத்திற்கும் இது பெருமைக்குரிய தருணமாகும். பல ஆண்டுகளாக சமூக சேவை, கல்வி, தொண்டு, கலாச்சாரப் பாதுகாப்பு மற்றும் ஜனநாயகப் பங்களிப்பு ஆகியவற்றின் மூலம் உருவாக்கப்பட்ட நற்பெயரின் ஒரு அங்கீகாரமாக இந்த நிகழ்வைக் காணலாம். இது தமிழர் சமூகத்தின் மீது பிரித்தானிய அரசியல் அமைப்பு வைத்திருக்கும் நம்பிக்கையையும் வெளிப்படுத்துகிறது. அதே நேரத்தில், இந்த வெற்றி எந்த ஒரு இனத்திற்கோ அல்லது சமூகத்திற்கோ மட்டுமே சொந்தமானதல்ல; திறமைக்கும் அர்ப்பணிப்பிற்கும் ஜனநாயகம் வழங்கும் அங்கீகாரத்தின் வெளிப்பாடாகும்.

இன்றைய உலக அரசியலில் பல்வகைமையும் சமூக உள்ளடக்கமும் அதிக முக்கியத்துவம் பெறுகின்றன. மக்கள் தொகையின் பல்வேறு பின்னணிகளை பிரதிபலிக்கும் அரசாங்கங்கள் மட்டுமே சமூக ஒற்றுமையையும் சமத்துவத்தையும் வலுப்படுத்த முடியும் என்ற புரிதல் வலுவடைந்து வருகிறது. அந்த அடிப்படையில், உமா குமாரனின் நியமனம் சிறுபான்மை சமூகங்களின் பிரதிநிதித்துவத்தை வலுப்படுத்தும் ஒரு நேர்மறையான முன்னேற்றமாகவும் பார்க்கப்படுகிறது.

இருப்பினும், இத்தகைய உயரிய பொறுப்புகள் பெருமையை மட்டுமல்ல, பெரிய பொறுப்பையும் கொண்டுள்ளன. அமைச்சராகவும் Assistant Whip ஆகவும் செயல்படுபவர்கள் அனைத்து குடிமக்களினதும் நலனைக் கருத்தில் கொண்டு, நல்லாட்சி, பொறுப்புணர்வு, வெளிப்படைத்தன்மை மற்றும் ஜனநாயக மதிப்புகளை முன்னிறுத்திச் செயல்பட வேண்டிய கடமையைக் கொண்டுள்ளனர். அந்தப் பொறுப்புகளை திறம்பட நிறைவேற்றுவதன் மூலம் மட்டுமே மக்களின் நம்பிக்கையை நிலைநிறுத்த முடியும்.

உமா குமாரன் எம்.பி. அவர்கள் அமைச்சர் மற்றும் Assistant Whip ஆக நியமிக்கப்பட்டிருப்பது, பிரித்தானிய அரசியலில் ஒரு குறிப்பிடத்தக்க நிகழ்வாக மட்டுமல்ல; தமிழர் புலம்பெயர் சமூகத்தின் பல தலைமுறைகளின் உழைப்பு, கல்வி, சமூகப் பங்களிப்பு மற்றும் ஜனநாயக நம்பிக்கையின் வெற்றியைப் பிரதிபலிக்கும் வரலாற்றுச் சாதனையாகும். இது உலகம் முழுவதும் வாழும் தமிழர்களுக்கு புதிய நம்பிக்கையையும், இளம் தலைமுறைக்கு உயர்ந்த இலக்குகளை நோக்கிச் செல்லும் ஊக்கத்தையும் வழங்குகிறது.

ஜனநாயக அரசியலில் திறமை, அர்ப்பணிப்பு மற்றும் பொதுநலச் சேவை ஆகியவை எப்போதும் மதிக்கப்படுகின்றன என்பதை இந்த நியமனம் மீண்டும் உறுதிப்படுத்துகிறது. எதிர்காலத்தில் மேலும் பல தமிழர்கள் உலகின் பல நாடுகளின் அரசியல் தலைமைத்துவத்தில் இடம்பெறுவதற்கான ஊக்கத்தையும் தன்னம்பிக்கையையும் இந்த வரலாற்று மைல்கல் நிச்சயமாக உருவாக்கும்.




# ஆகஸ்ட் 1; குப்பை வீசினால் 250 பிராங்க் வரை அபராதம்

பொது இடங்களில் குப்பை வீசுவதற்கான அபராதங்கள் ஏற்கெனவே நடைமுறையில் இருந்தாலும், அவை நகராட்சிகளுக்கு ஏற்ப மாறுபடுகின்றன.

இந்த நிலையில், முதன்முறையாக நாடு முழுவதற்குமான ஒரே மாதிரியான அபராத முறை அறிமுகப்படுத்தப்படுகிறது. வீசப்படும் கழிவின் வகை மற்றும் அளவைப் பொறுத்து அதிகபட்சமாக 250 சுவிஸ் பிராங்க் வரை அபராதம் விதிக்கப்படலாம். கழிவுகளைக் குறைந்தபட்சமாக வைத்திருக்க வேண்டும் என்றும், கழிவு உருவாவதைத் தவிர்க்க முடியாதபோது மறுசுழற்சி முறைகளைப் பயன்படுத்த வேண்டும் என்றும் மத்திய அரசு வலியுறுத்தியுள்ளது.

# நீர்நிலைகளில் ஒரு மாதத்தில் 15 பேர் உயிரிழப்பு




சுவிட்சர்லாந்தின் ஏரிகள் மற்றும் ஆறுகளில் கடந்த 30 நாட்களில் இடம்பெற்ற நீச்சல் விபத்துகளில் குறைந்தது 15 பேர் உயிரிழந்துள்ளதாக சுவிஸ் உயிர்காப்புச் சங்கம் தெரிவித்துள்ளது.

17 முதல் 32 வயதுடைய இளைஞர்களும் 65 வயதுக்கு மேற்பட்டவர்களும் அதிகமாகப் பாதிக்கப்பட்டுள்ளனர். இளைஞர்களின் உயிரிழப்புகளுக்கு ஆபத்தான செயற்பாடுகளும், முதியவர்களின் விபத்துகளுக்கு உடல்நலக் காரணிகளும் முக்கிய காரணங்களாகக் குறிப்பிடப்படுகின்றன.



# சுவிட்சர்லாந்தை நெருங்கும் தீவிர வெப்ப அலை; 40 பாகையைத் தாண்டலாம்!

சுவிட்சர்லாந்தில் தற்போது 27 முதல் 30 பாகை செல்சியஸ் வரையான வழக்கமான கோடைக்கால வெப்பநிலை நிலவுகின்றது. எனினும், அடுத்த வாரம் மிகவும் தீவிரமான வெப்ப அலை ஏற்படக்கூடும் என Meteonews எச்சரித்துள்ளது.

வார இறுதியில் சில பகுதிகளில் மழையும் இடியுடன் கூடிய மழையும் எதிர்பார்க்கப்படுகிறது. ஆனால் சமவெளிப் பகுதிகளில் கிடைக்கும் மழை, தற்போதைய வறட்சியைக் குறைக்கப் போதுமானதாக இருக்காது.

செவ்வாய்க்கிழமை முதல் நிலையான உயர் அழுத்த வானிலை உருவாகும் என்றும், வியாழக்கிழமை முதல் வெப்பநிலை 35 பாகையைத் தாண்டும் என்றும் வானிலை ஆய்வாளர் Roger Perret தெரிவித்துள்ளார்.

சில இடங்களில் 40 பாகை செல்சியஸுக்கும் அதிகமான வெப்பநிலை பதிவாகும் சாத்தியத்தையும் நிராகரிக்க முடியாது என அவர் எச்சரித்துள்ளார்.

சுவிட்சர்லாந்தில் இதுவரை பதிவான அதிகபட்ச வெப்பநிலை 41.5 பாகையாகும். இது 2003 ஆகஸ்ட் 11ஆம் தேதி Graubnden மாநிலத்தின் Grono பகுதியில் பதிவானது.

காலநிலை மாற்றம் காரணமாக நீண்டகால வெப்ப அலைகள் எதிர்காலத்தில் மேலும் அடிக்கடி ஏற்படக்கூடும். அடுத்த வாரம் எதிர்பார்க்கப்படும் வானிலை, அடுத்த 10 முதல் 30 ஆண்டுகளில் சுவிட்சர்லாந்தின் கோடைக்காலங்களில் அடிக்கடி சந்திக்கக்கூடிய நிலையின் முன்னோட்டமாக இருக்கலாம் என நிபுணர் தெரிவித்துள்ளார்.



# சூரிச் வீட்டுவசதி நெருக்கடிக்கு Zuerichberg அடர்த்தியாக்கல் மட்டும் தீர்வல்ல!

சூரிச் நகரின் Kreis 7 பகுதியில் அமைந்துள்ள Zuerichberg-இல் அதிக உயரமான மற்றும் அடர்த்தியான குடியிருப்புக் கட்டடங்களை அனுமதிக்க வேண்டும் என நகரின் GLP கட்சி கோரிக்கை விடுத்துள்ளது.

இது திட்டமிடல் பீதியாகச் சாத்தியமானது என்றாலும், Zuerichberg பகுதியில் சிறிய தனியார் காணிகளே அதிகமாக உள்ளதால், பழைய வீடுகளை இடித்துக் கட்டினாலும் நான்கு முதல் ஆறு கூடுதல் வீடுகளே உருவாகக்கூடும் என உகூஏ நகர அபிவிருத்தி ஆய்வாளர் மைக்கேல் விக்கி தெரிவித்துள்ளார். மேலும், பழைய கட்டடங்களை அகற்றி புதிய வீடுகள் கட்டப்படும்போது வாடகை அதிகரித்து, குறைந்த வருமானம் பெறும் குடியிருப்பாளர்கள் வெளியேற்றப்படும் அபாயமும் உள்ளது. இருப்பினும் Zuerichberg-இல் மலிவான வாடகை வீடுகள் குறைவாக உள்ளதால், இந்த அபாயம் Altstetten அல்லது Schwamendingen பகுதிகளைவிடக் குறைவாக இருக்கலாம்.

Zuerichberg-ஐ மட்டும் அடர்த்தியாகக் கட்டியமைப்பதால் சூரிச்சின் வீட்டுவசதி நெருக்கடியையோ அதிக வாடகைப் பிரச்சினையையோ தீர்க்க முடியாது. இடிக்கப்படும் ஒவ்வொரு கட்டடத்திற்கும் பதிலாக கணிசமான எண்ணிக்கையில் புதிய வீடுகள் உருவாக்கப்பட வேண்டும் என மைக்கேல் விக்கி வலியுறுத்தியுள்ளார்.




# கடும் வறட்சியின் பிடியில் சுவிட்சர்லாந்து

# தண்ணீரைச் சிக்கனமாகப் பயன்படுத்த வலியுறுத்தல்

சுவிட்சர்லாந்தை இந்தக் கோடைக்காலத்தின் மூன்றாவது வெப்ப அலை நெருங்கிவரும் நிலையில், வெப்பநிலை 40 பாகை செல்சியஸ் வரை உயரக்கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது. அதேவேளை, நாடு முழுவதும் ஆறுகள், ஏரிகள் மற்றும் நிலத்தடி நீர்மட்டங்கள் தொடர்ந்து குறைந்து வருகின்றன. பனிப்படலம் முற்றாக மறைந்துள்ளதுடன், பெரும்பாலான இயற்கை நீர்த்தேக்கங்களும் மிகவும் குறைந்த மட்டத்தை எட்டியுள்ளதாக உஃஎ சூரிச் மற்றும் ஙிகுஃ நீரியல் நிபுணர் மனுவேலா புருனர் தெரிவித்துள்ளார்.

இதன் முக்கிய விளைவுகள்:

★ விவசாயத்திற்கான நீர்ப்பாசனம் மற்றும் ஆறுகளிலிருந்து நீர் எடுப்பதற்குக் கட்டுப்பாடுகள்

★ நீர்த்தேக்க மின் உற்பத்தி குறைந்து, குளிர்கால மின்சார விநியோகம் பாதிக்கப்படும் அபாயம்

★ காடுகள் வறண்டு காட்டுத்தீ அபாயம் அதிகரித்தல்

★ அதிக நீர் வெப்பநிலையால் மீன்கள் மற்றும் நீர்வாழ் உயிரினங்களுக்கு ஆபத்து

★ நிலத்தடி நீர்மட்டம் குறைவதால் குடிநீர் ஊற்றுகள் வறண்டுபோகும் சாத்தியம்

★ நிலத்தடி நீரின் வெப்பநிலை உயர்ந்து குடிநீரின் தரம் பாதிக்கப்படும் அபாயம்

மழைப்பொழிவையும் காலியான நீர்த்தேக்கங்களையும் தற்போது கட்டுப்படுத்த முடியாத நிலையில், தண்ணீர்ப் பயன்பாட்டைக் குறைப்பதே மக்களிடம் எஞ்சியுள்ள முக்கியமான வழி என நிபுணர் வலியுறுத்தியுள்ளார். ஏப்ரல் மாதத்திலிருந்து தற்போது வரை வழக்கமாகக் கிடைக்க வேண்டிய மழையின் அரைவாசி மட்டுமே பெய்துள்ளது. நிலைமை சீரடைய, திடீர் கனமழை அல்லாமல் பல நாட்களுக்கு தொடர்ச்சியாக மிதமான மழை பெய்ய வேண்டுமென தெரிவிக்கப்பட்டுள்ளது.

காலநிலை மாற்றம் காரணமாக எதிர்காலத்தில் இதுபோன்ற வறட்சிகள் அடிக்கடி ஏற்படக்கூடும் என்பதால், மழைநீரைச் சேமித்தல், நிலத்தடி நீரை செயற்கையாக நிரப்புதல் மற்றும் விவசாயத்திற்கான நீர்த்தேக்கக் குளங்களை உருவாக்குதல் போன்ற நீண்டகாலத் திட்டங்கள் அவசியம் என நிபுணர்கள் எச்சரித்துள்ளனர்.




# நான்கு ஆண்டுகளுக்கு முன்பு உடற்கல்வி ஆசிரியர்

## இன்று FC Luzern தலைமைப் பயிற்சியாளர்

நான்கு ஆண்டுகளுக்கு முன்புவரை பாடசாலையில் உடற்கல்வி ஆசிரியராகப் பணியாற்றிய உடோ போர்ட்மான், தற்போது சுவிட்சர்லாந்தின் முன்னணி கால்பந்து அணிகளில் ஒன்றான FC Luzern அணியின் தலைமைப் பயிற்சியாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

49 வயதான போர்ட்மான் தொழில்முறைக் கால்பந்து வீரராக விளையாடியதில்லை. FC Rothenburg அணியில் வீரர் மற்றும் பயிற்சியாளராகத் தனது பயிற்சிப் பணியை ஆரம்பித்த அவர், பின்னர் FC Eschenbach மற்றும் SC Cham அணிகளுக்குப் பயிற்சியளித்தார். SC Cham Aoø¯ Promotion League நிலைக்கு உயர்த்தியதன் மூலம் அவர் கவனம் பெற்றார்.

போர்ட்மானின் முக்கிய பலமாக வீரர்களுடன் பழகும் திறனும், அனைவரையும் அணியின் ஓர் அங்கமாக உணரச்செய்யும் மனிதநேய அணுகுமுறையும் குறிப்பிடப்படுகின்றன. திறமையான வீரர்களை மட்டுமன்றி, வாய்ப்புக் குறைவாகக் கிடைக்கும் வீரர்களையும் மதித்து ஊக்குவிப்பது அவரது சிறப்பம்சமாகும்.

சுமார் 20 ஆண்டுகள் உடற்கல்வி ஆசிரியராகப் பணியாற்றிய அனுபவமும், இளைஞர்களைப் புரிந்துகொண்டு வழிநடத்தும் திறனை வளர்த்ததாக அவர் கூறுகிறார்.

# அணைகள் 46 சதவீதம் மட்டுமே நிரம்பியுள்ளன

பல வாரங்களாக நீடிக்கும் வெப்பமும் வறட்சியும் ஏரிகள், ஆறுகள் மற்றும் நீர்த்தேக்கங்களைப் பாதித்துள்ளன.

சுவிஸ் அணைகளின் நீர் இருப்பு 46 சதவீதமாகக் குறைந்துள்ளது. இது கடந்த 20 ஆண்டுகளில் பதிவான மிகக் குறைந்த அளவாகும்.






# சீன மலிவுப் பொதிகளின் இடைநிலை மையமாக மாறுமா சுவிட்சர்லாந்து?

சீனாவின் Shein, Temu போன்ற இணைய வர்த்தகத் தளங்களிலிருந்து வரும் சிறிய பொதிகளுக்கு ஐரோப்பிய ஒன்றியம் ஜூலை 1 முதல் புதிய கட்டணத்தை அறிமுகப்படுத்தியுள்ளது. 150 யூரோவுக்கும் குறைவான ஒவ்வொரு கொள்வனவுக்கும் மூன்று யூரோ நிலையான கட்டணம் விதிக்கப்படுகிறது.

ஆனால் சீன இணைய வர்த்தக நிறுவனங்கள் பொதிகளை விமானம் மூலம் முதலில் சுவிட்சர்லாந்துக்கு அனுப்பி, அங்கிருந்து வீதி அல்லது ரயில் வழியாக ஐரோப்பிய நாடுகளுக்கு எடுத்துச் செல்வதன் மூலம் இந்தக் கட்டணத்தைத் தவிர்க்கக்கூடும் என எச்சரிக்கப்பட்டுள்ளது. இதனால் சீன மலிவுப் பொதிகளின் இடைநிலை விநியோக மையமாகச் சுவிட்சர்லாந்து மாறும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

சுவிஸ் சுங்கத்துறைக்கு தினமும் பல இலட்சம் பொதிகள் வருவதால், அது ஏற்கெனவே கடும் பணிச்சுமையை எதிர்கொள்கிறது. எனவே சீனாவிலிருந்து வரும் அனைத்துப் பொதிகளையும் முழுமையாகச் சோதிப்பது சாத்தியமில்லை. இதனால் பாதுகாப்பு மற்றும் சுகாதாரத் தரங்களைப் பூர்த்திசெய்யாத பொருட்களும் சுவிட்சர்லாந்து வழியாக ஐரோப்பிய சந்தைக்குள் எளிதாக நுழையக்கூடும்.

ஐரோப்பிய ஒன்றியத்துடன் ஒரே நேரத்தில் இதற்கான சட்டங்களைச் சுவிஸ் அரசு அறிமுகப்படுத்தவில்லை என கதஞடேிஞி உதூது அமைப்பு விமர்சித்துள்ளது. சுவிட்சர்லாந்தில் இதற்கான புதிய கட்டுப்பாடுகள் 2028ஆம் ஆண்டுக்கு முன்னர் நடைமுறைக்கு வர வாய்ப்பில்லை என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது

# சூரிச் பிரதான ரயில் நிலையத்தின் பிரபல உணவகம் நட்டத்தில்

## நிர்வாகத்திலிருந்து விலகும் உரிமையாளர்கள்

சூரிச் பிரதான ரயில் நிலையத்தில் இயங்கும் புகழ்பெற்ற Restaurant Sd எதிர்பார்த்த அளவுக்கு வருமானம் ஈட்டத் தவறியதால், அதனை நடத்திவந்த பிரபல உணவகத் தொழிலதிபர்கள் நிர்வாகத்திலிருந்து விலகுகின்றனர்.

அண்மையில் பெரும் செலவில் புதுப்பிக்கப்பட்ட இந்த உயர்தர உணவகம், தனது வணிகக் கொள்கையையும் உணவு வழங்கும் முறையையும் மாற்றிப் பார்த்தது. எனினும், அந்த மாற்றங்களாலும் வாடிக்கையாளர்களை போதுமான அளவில் ஈர்த்து உணவகத்தை இலாபகரமாக்க முடியவில்லை. இதையடுத்து, Restaurant Sd-இன் நிர்வாகப் பொறுப்பை ஒரு பெரிய உணவகக் குழுமம் ஏற்கவுள்ளது. புதிய நிர்வாகத்தின் கீழ் உணவகத்தின் சேவைகளிலும் வணிகத் திட்டத்திலும் மேலும் மாற்றங்கள் மேற்கொள்ளப்படலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.



# ஒல்டனின் தன்னார்வத் தூய்மைப் பணியாளர் தர்மரத்தினம் தேவராஜா

சொந்த நாடு இல்லாத நாம் தற்போது சுவிஸ் நாட்டில் வாழ்கின்றோம். நம்மை இருப்பதற்கு அனுமதியளித்த இந்நாட்டிற்கு விசுவாசமாக இருக்க வேண்டும். அதற்காக எனது ஓய்வு நேரங்களில் தன்னார்வத் தூய்மைப் பணியாளராக சேவை செய்கின்றேன் என சுபீட்சத்திடம் தெரிவித்தார்.ஒல்டன் நகரில் வசிக்கும் தர்மரத்தினம் தேவராஜா,

கடந்த ஓராண்டாகத் தனது ஓய்வு நேரத்தைச் சுற்றுப்புறத் தூய்மைக்காக அர்ப்பணித்து வருகிறார். தான் வசிக்கும் பகுதி மற்றும் பணிபுரியும் இடங்களின் சுற்றுவட்டாரத்தில் வீசப்படும் குப்பைகளைத் தன்னார்வமாகச் சேகரித்து, அவற்றை முறையாக அகற்றி வருகிறார்.

34 ஆண்டுகளாக ஒல்டனில் வாழ்ந்துவரும் தேவராஜா, சுற்றுச்சூழல் பாதுகாப்பில் மிகுந்த அக்கறை கொண்டவர். குப்பைகளை அகற்றுவது மட்டுமன்றி, மக்கள் கழிவுகளைத் தரையில் வீசாமல் உரிய தொட்டிகளில் போடவேண்டும் என்ற விழிப்புணர்வை ஏற்படுத்துவதும் தனது முக்கிய நோக்கம் எனத் தெரிவித்துள்ளார்.

**சிறிய குப்பைகள் ஏற்படுத்தும் பெரிய பிரச்சினை**

கடந்த சில மாதங்களில் மட்டும் சுமார் 45 மணிநேரத்தைத் தூய்மைப் பணிக்காக அவர் செலவிட்டுள்ளார். ஒரு 17 லிட்டர் குப்பைப் பையை நிரப்புவதற்கே எதிர்பார்த்ததைவிட அதிக நேரம் தேவைப்படுவதாக அவர் கூறுகிறார்.

மக்கள் நினைப்பதுபோல் எல்லா இடங்களிலும் பெரிய குப்பைகள் கிடப்பதில்லை. ஆனால் எண்ணிலடங்காத சிறிய கழிவுகள் காணப்படுகின்றன.

சிகரெட் துண்டுகள், பானப் பாட்டில்கள், அலுமினிய டின்கள், பயன்படுத்திவிட்டு வீசப்படும் மின்சிகரெட்டுகள் மற்றும் பிளாஸ்டிக்



கழிவுகளையே அவர் அதிகமாகச் சேகரிக்கிறார். சில பகுதிகளில் ஒரே நாளில் மூன்று பெரிய குப்பைப் பைகள் நிரம்பும் அளவுக்குக் கழிவுகள் கிடைப்பதாகவும் தெரிவித்துள்ளார்.

**பொதுமக்களிடமிருந்து பாராட்டு**

தேவராஜாவின் சமூக அக்கறைமிக்க பணியைப் பலரும் நேரில் பாராட்டி வருகின்றனர். ஒருமுறை வயதான பெண்மணி ஒருவர், நீங்கள் செய்யும் பணிக்காக ஒரு காப்பி குடியுங்கள் என்று கூறி 10 சுவிஸ் பிராங்குகளை வழங்கிய சம்பவத்தையும் அவர் நெகிழ்ச்சியுடன் நினைவுகூர்ந்தார்.

**கழிவுகளைப் பிரித்து மறுசுழற்சி**

அவர் குப்பைகளைச் சேகரிப்பதோடு நிறுத்திக்கொள்வதில்லை. கண்ணாடிப் பாட்டில்கள், அலுமினிய டின்கள் உள்ளிட்ட மறுசுழற்சி செய்யக்கூடிய பொருட்களைத் தனித்தனியாகப் பிரித்து, உரிய சேகரிப்பு மையங்களுக்குக் கொண்டு செல்கிறார்.

குளிர்காலத்தில் வெளிப்புறக் குப்பைகளின் அளவு குறைவாக இருக்கும் என்பதால், உள்ளூர் மளிகைக் கடைகளுக்குச் சென்று கழிவுகளைச் சரியான முறையில் பிரித்துச் சேகரிப்பது தொடர்பான உதவிகளையும் வழங்கி வருகிறார்.

**தொழிலால் சமையல்காரர்**
**மனதால் சமூக சேவகர்**

தர்மரத்தினம் தேவராஜா, ஒல்டனிலுள்ள முதியோர் பராமரிப்பு இல்லமொன்றில் சமையல்காரராகப் பணியாற்றி வருகிறார். சமையலில் தனிப்பட்ட ஆர்வம் கொண்ட அவர், குறிப்பாகக் குழந்தைகளுக்கும் லாக்டோஸ் ஒவ்வாமை உள்ளவர்களுக்கும் ஏற்ற பல உணவு வகைகளைத் தனது சொந்த முயற்சியில் உருவாக்கியுள்ளார். அந்தச் சமையல் குறிப்புகளை ஆர்வமுள்ளவர்களுடன் பகிர்ந்துகொள்ளத் தயாராக இருப்பதாகவும் தெரிவித்துள்ளார்.

தனது ஓய்வு நேரத்தைச் சுற்றுச்சூழலுக்கும் சமூகத்திற்கும் பயனுள்ள வகையில் செலவிடும் தர்மரத்தினம் தேவராஜாவின் பணி, தனிநபர் முயற்சியாலும் வாழும் நகரத்தைத் தூய்மையாகவும் அழகாகவும் மாற்ற முடியும் என்பதற்குச் சிறந்த முன்னுதாரணமாக அமைந்துள்ளது.






# சுவிட்சர்லாந்தில் குடியேற்றப் பின்னணி கொண்டோரின் வாழ்க்கைத் தரம் மேம்பாடு

FSO ஆய்வு: வறுமை குறைகிறது; வருமானம் அதிகரிக்கிறது

பேர்ன்: சுவிட்சர்லாந்தில் குடியேற்றப் பின்னணி கொண்ட மக்களின் பொருளாதார மற்றும் சமூக நிலை கடந்த சில ஆண்டுகளில் குறிப்பிடத்தக்க அளவில் மேம்பட்டு வருவதாக, சுவிஸ் கூட்டாட்சி புள்ளிவிவர அலுவலகம் (FSO) வெளியிட்டுள்ள புதிய ஆய்வு தெரிவிக்கிறது.

ஆய்வின்படி, குடியேற்றப் பின்னணி கொண்டவர்களின் வருமானம் இன்னும் சுவிஸ் குடியுரிமை பெற்றவர்களை விட குறைவாகவே உள்ளது. மேலும், அவர்கள் குறுகலான மற்றும் அதிக சத்தம் நிறைந்த வீடுகளில் வசிக்கும் வாய்ப்பும் அதிகமாக உள்ளது.

வேலை செய்தாலும் வறுமைக் கோட்டுக்குக் கீழ் வாழும் ''Working Poor'' நிலை இந்தக் குழுவினரிடையே அதிகமாகக் காணப்படுவதுடன், அன்றாட வாழ்க்கைச் செலவுகளை சமாளிப்பதிலும் அவர்கள் கூடுதல் சிரமங்களை எதிர்கொள்கின்றனர். உடல் நலக் காப்பீட்டில் சேர்க்கப்படாத பல் சிகிச்சை போன்ற மருத்துவ சேவைகளையும் பலர் பொருளாதாரக் காரணங்களால் தவிர்க்க வேண்டிய நிலை உள்ளது.

எனினும், அண்மைக் காலங்களில் இவர்களின் நிலைமையில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளதாக ஊகுங சுட்டிக்காட்டியுள்ளது. வாழ்க்கைச் செலவுகளை சமாளிப்பதில் இருந்த சிரமம் குறைந்ததுடன், வறுமை விகிதமும் சரிவடைந்துள்ளது. அதேவேளை, பயன்படுத்தக்கூடிய சராசரி வருமானம் அதிகரித்துள்ளதுடன், குடியேற்றப் பின்னணி கொண்டவர்களுக்கும் இல்லாதவர்களுக்கும் இடையிலான பொருளாதார இடைவெளியும் படிப்படியாகக் குறைந்து வருவதாக ஆய்வு தெரிவிக்கிறது.

2024 ஆம் ஆண்டுக்கான புள்ளிவிவரங்களின்படி, சுவிட்சர்லாந்தின் 15 வயதுக்கு மேற்பட்ட நிரந்தர மக்கள்தொகையில் 41 சதவீதம் பேர் குடியேற்றப் பின்னணி கொண்டவர்கள். இதில் வெளிநாடுகளில் பிறந்தவர்கள் அல்லது அவர்களின் பெற்றோர் மற்றும் தாத்தா-பாட்டிகள் வேறு நாடுகளில் இருந்து குடியேறியவர்கள் அடங்குகின்றனர்.

இதேவேளை, குடியேற்றப் பின்னணி கொண்ட அனைவரும் குறைந்த வருமானம் பெறுபவர்கள் அல்ல என்றும் ஊகுங வலியுறுத்தியுள்ளது. வங்கி, மருந்துத் தொழில், தகவல் தொழில்நுட்பம் (IT), நிதித்துறை போன்ற உயர் வருமானத் துறைகளில் பணியாற்றும் பல வெளிநாட்டு நிபுணர்கள், பல சந்தர்ப்பங்களில் சுவிஸ் குடிமக்களை விட அதிக வருமானம் பெறுவதாகவும் ஆய்வில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மொத்தத்தில், குடியேற்றப் பின்னணி கொண்டோரின் வாழ்க்கைத் தரத்தில் இன்னும் சவால்கள் காணப்பட்டாலும், அவர்களின் பொருளாதார நிலை தொடர்ந்து மேம்பட்டு வருவதாக இந்த ஆய்வு உறுதிப்படுத்துகிறது.



# சுவிட்சர்லாந்தில் சுமார் 15 லட்சம் பசுக்கள்

சுவிட்சர்லாந்தில் சுமார் 15 லட்சம் பசுக்கள் உள்ளன. நாட்டில் பசுக்களுக்கு அதிகமாகச் சூட்டப்படும் பெயர்களாக Fiona, Diana, Bella, Bianca மற்றும் மீடிணச் ஆகியவை பதிவாகியுள்ளதாக சுவிட்சர்லாந்தின் முன்னணி இணையத்தளமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இந்நிலையில், சுவிட்சர்லாந்தில் நீடிக்கும் கடும் வறட்சியால் பல விவசாயப் பண்ணைகளில் பசுக்களுக்குத் தேவையான வைக்கோல் மற்றும் கால்நடைத் தீவனம் தீர்ந்து வருகிறது.

Basel&Landschaft மாகாணத்தைச் சேர்ந்த விவசாயிகளான சாண்ட்ரா மற்றும் பிலிப் ரொசெட், தங்களுடைய 30 பால் பசுக்களுக்கு உணவு வாங்குவதற்காக இணையவழி நிதித் திரட்டலை ஆரம்பித்துள்ளனர். வறட்சியால் அதிகம் பாதிக்கப்படாத மற்றும் சொந்தமாகக் கால்நடைகள் இல்லாத பண்ணைகளிடமிருந்து வைக்கோலை வாங்க அவர்கள் திட்டமிட்டுள்ளனர்.

தீவனப் பற்றாக்குறை காரணமாகத் தங்களுடைய பசுக்களில் எதனையும் இறைச்சிக்காக அனுப்ப வேண்டிய நிலை ஏற்படக்கூடாது என்பதே இந்த நிதித் திரட்டலின் நோக்கம் என விவசாயிகள் தெரிவித்துள்ளனர்.

ஆரம்பத்தில் 3,500 சுவிஸ் பிராங்க் நிதி திரட்ட இலக்கு நிர்ணயிக்கப்பட்டிருந்தது. எனினும், 100க்கும் மேற்பட்டோர் வழங்கிய ஆதரவால் இதுவரை 12,700 பிராங்கிற்கும் அதிகமான நிதி திரட்டப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது





# மனித வாழ்க்கை விழுமியங்களும் போல, ஒப்ப, புரைய என்றாகி விட்ட நாளாந்த வாழ்க்கையும்.


குகைகளிலும், காடுகளிலும், மரங்களிலும் நாடோடிகளாக வழ்ந்து வந்த மனிதன் காலப் போக்கில் நதிக்கரைகளை அண்டி குடிசை அமைத்து நிலையான வாழ்க்கையை அமைத்துக் கொண்டான். இந்த நலையான வாழ்க்கையே அவனது உள்ளத்திலும் நடத்தையிலும் வாக்கைக் கோலத்திலும் பல மாற்றங்களை ஏற்படுத்தின. இந்த மாற்றம் நிலையான குடும்ப வாழ்க்கைக்கு வித்திட்டது. இதுவே உலகில் பல நதிக்கரை நாகரிகங்கள் தோன்றக் காரணமாக அமைந்தன. இக்கட்டமைப்பு மொழி, இனம், மதம், குலம், கோத்திரம், சாதி, சம்பிரதாயம் பழக்கவழக்கம், ஒழுக்கலாறு, விழுமியம் என்ற வகையில் பல மாற்றங்களை ஏற்படுத்தி நிலையான வாழ்க்கை இருப்புக்கு வழி வகுத்தன. மனிதன் வாழ்க்கையில் பல விடயங்களைக் கற்றுக் கொள்ள ஆரம்பித்தான். இவ்வாறு ஆரம்பித்த வாழ்க்கைப் பயணம் அன்பு, கருணை, காருண்ணியம், விட்டுக்கொடுப்பு, புரிந்துணர்வு, சுயமரியாதை என்பவற்றுடன் வஞ்சகம், சூது, வாது, கள்ளம், கபடம், களவு, பொய், காமம், கொலை, போட்டி, பொறாமை எல்லாம் கலவையாகி குடும்பம், கிராமம், நகரம், நாடு, பிராந்தியம், சர்வதேசம் என்றவகையில் நேர், எதிரான பல தாக்கங்ளை ஏற்படுத்திக் கொண்டிருக்கின்றன. இன்று குடும்பக் கட்டமைப்பும் வாழ்க்கை முறையும் பல இடங்களில் விமர்சனத்துக்கு உள்ளாகிக் கொண்டிருக்கின்றன.



சின்னத்தம்பி
குருபரன்

மனித வாழ்க்கை என்பது மிக மிகப் பெறுமதியானது. புனிதமானது. பிறப்புக்கும் இறப்புக்கும் இடையிலான இடைவெளிக்குள் வாழ்வதற்கென விதிக்கப்பட்டது வாழ்க்கை. உலக வாழ்க்கையில் பிறப்பு, பிணி, மூப்பு, சாக்காடு (இறப்பு) ஆகியன நிந்தரமானவை. அந்த வகையில் பிறப்பும் இறப்பும் மகிழ்ச்சியானது. ஆனால் இந்து மத ஆச்சாரம் தொடக்காகவும், விலக்காகவும் கொள்கிறது. உலகின் பல மதப் பிரிவுகள் அவை இரண்டையும் மகிழ்ச்சியாகவே சார்க்கின்றன. மனித வாழ்க்கையில் சந்தோசம், மகிழ்ச்சி, நிம்மதி ஆகியவற்றை அனுபவிக்காமல் பெரும்பாலானோர் வாழ்கையைச் சிறப்பாக வாழ முடியாமல் திண்டாடிக் கொண்டிருக்கினறனர்.

நமது வாழ்க்கையை நாம்தான் வாழ வேண்டும் அது நம் கையிலதான் உள்ளது. பலவீனமான ஒருவரின் வாழ்கையை இன்னொருவர் தீர்மானிக்கின்றார். அவரின் தாளத்துக்கு இவர் ஆடுகின்றார். இவ்வாறு தான் பலர் பெறுமதியற்றதாக வாழ்க்கை வாழ்கின்றனர்.



வாழ்க்கையை நாம்தான் அனுபவிக்க வேண்டும். அதன் இன்ப, துன்ப, துயரங் களை விரும்பியோ, விரும்பாமலோ அனுப வித்தே ஆகவேண்டும். இவை எல்லா மனிதர் களுக்கும் பொதுவானவை. வாழ்க்கை என்றால் ஆயிரம் இருக்கும். வாசல் தோறும் வேதனை இருக்கும். வந்த துன்பம் எது வென்றாலும் வாடி நின்றால் ஓடுவதில்லை. என்ற கவிஞர் கண்ணதாசனின் வரிகள் கவிஞர் வாலி உட்படப் பலரின் வாழ்க்கைப் பாதையையே மாற்றி அமைத்தது.. அது ஒரு வாழ்கைத் தத்துவம்.

இந்த இயற்கை எல்லா வளமும் நிறைந்தவை. வாழத் தெரிந்தவனுக்கு இது ஒரு பொக்கிசம். வாழத் தெரியாதவனுக்கு வெறும் நரகம். வாழத் தெரிந்தவன் உச்ச த்தை எட்டுகிறான். வெற்றியை அடைகிறான். வாழத் தெரியாதவன் துன்ப, துயரங்களில் உழன்று கொண்டிருக்கிறான். உலகில் இரவு, பகல் தோன்றுவது போல் துன்ப, துயரங் களும் நிரந்தரமானவை. அவற்றிலிருந்து விடுபட்டு சந்தோசம், மகிழ்ச்சி, நிம்மதியோடு வாழப் பழகிக் கொண்டவன் எத்தகைய சூழ்நிலையிலும் தன்னைச் சுதாகரித்துக் கொண்டு வாழ்பவனாகின்றான். ‘உங்களில் எத்தனை பேர் மகிழ்ச்சியாக, சந்தோசமாக வாழ்கிறீர்கள்’ என்று கேட்டால் பலரிடம் இருந்து இல்லை என்பதே பதிலாக வரும். இதற்குக் காரணமென்ன?. நாம் வாழ்கை யைத் திட்டமிட்டுச் சரியாக வாழவில்லை என்பதுதான் அர்த்தமாகிறது. ‘வீட்டுக்கு வீடு வாசற்படி என்பது போல் எல்லோரிடமும் ஏதோ ஒரு வகையில் பிரச்சினை, குறைகள், எதிர் பார்ப்புக்கள் இருக்கின்றன. அதற்குக் காரணம் நாம் வாழ வேண்டிய வாழ்க்கையை இன்னொருவருக்காக வாழ்ந்து கொண்டி ருப்பதுதான். பிறரைப் பார்த்து அவரின் வாழ்க்கை முறையை ஆகர்சித்து போல, ஒப்ப, புரைய என்பது போல பலர் வாழ்ந்து கொண்டிருக்கினறனர்.

வாழ்கை என்பது உலகில் வாழும் சகல உயிர்களுக்கும் கொதுவானது. அவற்றுள் மனிதனை சிந்திக்கச் சிரிக்கத் தெரிந்த விலங் காக விஞ்ஞானம் இனங்காட்டுகிறது. மனிதன் பரிசம், ரசம், கந்தம், ரூபம்,, ரூபாரூபம், பகுத் தறிவு ஆகிய ஆறறிவினைக் கொண்டவன். அவன் பகுத்தறிவைப் பயன்படுத்தி வாழ்கை யைச் சீரமைத்துக் கொள்கிறான். அத்தகைய மனிதனைப் பலவீனமாக்குவது ஆசை, அகம்பாவம், கோபம், பதவி, அதிகாரம், செல் வாக்கு, புகழ், ஆகியன. இவற்றுள் ஒருவரிடம் சிலவோ பலவோ ஒன்றித்திருப்பின் அவர் விரைவில் தோல்வியடையத் தயாராகின்றார் என்பது அர்த்தமாகின்றது.‘பதவி வரும்போது பணிவு வரவேண்டும். ஆனால் இன்றோ அவ்வாறல்ல பதவி வரும்போது கொம்பு முளைத்தவர்கள் போல் இறுமாப்புடன் பலர் சமூகத்தில் நடமாடுகின்றனர். பதவிக்கூடாக உருவாகும் ஆசை, அகம்பாவம், கர்வம், நான் என்ற அகங்காரம், ஆள்பலம், செல் வாக்கு, அதிகாரம ஆகியன ஒருவரிடம் வந்து சேர்ந்தால் அவர் தலை, கால் புரியாமல் ஆட்டம் போடுவார். இன்று அவ்வாறுதான் பலர் நடந்து கொண்டிருக்கின்றனர். அவர்கள் விரைவில் ஆட்டங்கண்டு பதவி, கௌரவம், செல்வாக்கு, புகழ் அனைத்தையும் இழந்து சமூகத்தினால் தூக்கி வீசப்படுவர் என்பது வரலாறு உணர்த்திய உண்மைகளாகும். அதேபோல் அகம்பாவத்தினால் தோல்வி அடைக்தவர்களின் வரலாற்றை படிப்பதன் மூலம் அறிந்து கொள்ளலாம். உலக வரலாற் றில் நிகழ்ந்த யுத்தங்கள், படையெடுப்புக்கள், அரசர்களிடம் காணப்பட்ட மண்ணாசை, பெண்ணாசை, பொன்னசை, புகழாசை என்ப வற்றால் அவர்களின் சாம்பிராச்சியங்களும், பேரரசுகளும் தோல்வியடைந்து, ‘முடிசார்ந்த மன்னரும் முடிவில் ஒரு பிடிசாம்பலாவர்’ என்பதை மிகச் சாவகாசமாக உணர்த்திய வரலாறுகளை அறிந்து கொள்வதன் மூலம் தெளிவடையலாம். அத்தகைய வரலாறுகள் உணர்த்திய உண்மைத் தத்துவத்தை மறந்து மனிதன் மனதின் இச்சை வழிக்கு ஆட்பட்டு மனம் போன போக்கில் வாழ்ந்து கொண்டி ருக்கிறான்.

மனம் போன போக்கிலே கால்கள் போகலா மா? கால்கள் போன போக்கிலே மனம் போக லாமா? மனம் போன போக்கிலே மனிதன் போகலாமா? மனிதன் போன பாதையை

மறந்து போகலாமா என்ற கவிஞரின் பாடலடிகள் இதனைத் தெளிவாக உணர்த்துகின்றன. பெரும்பாலானோர் தனக்கென, சமூகத்துக்கென, நாட்டுக்கென வாழாது போல, ஒப்ப, புரைய வாழ்ந்து கொண்டிருக்கினறனர்.

நமது வாழ்க்கையை நாம்தான் வாழ வேண்டும் என்பதை மறந்து, வாழ்கை பெறுமதியானது, அழகானது, இரம்மியமானது, நாம் இழந்த வாழ்க்கை மீண்டு வராது என்பதை உணராது மனம் போன போக்கில் வாழ்ந்து கொண்டிருக்கின்றனர் பலர். இன்னும் பலர் தமது வாழ்க்கையை குரங்கின் கையில் அகப்பட்ட பூமாலை போல்; சிதைத்துக் கொண்டிருக்கின்றனர். எல்லோருக்கும் எல்லாமும் கிடைத்துவிட்டால் வாழ்கை சுவாரசியமாக இருக்காது. அது கஷ்டம், நஷ்டம், துன்பம், துயரம், சவால்கள், வெற்றி, தோல்வி, ஏமாற்றம், எதிர்ப்புகள், துரோகம், வஞ்சகம் என்பவற்றுக்கூடாக அவற்றை எதிர் கொண்டு சமாளித்து வாழப் பழகிக் கௌ;ள வெண்டும். வாழ்க்கையைப் புடம்போட்டுக் கடடி எழுப்படும் போதுதான் அது பெறுமதியானதாக மாறுகிறது. ஒவ்வொருவருடைய வெற்றியும் இன்னொருவருடைய பலவீனத்துக்கூடாகக் கட்டியெழுப்பப்படுகிறது. எதுவம் நிரந்தரமானதல்ல. யாவும் கடந்து போகும். மாற்றம் ஒன்றுதான் மாறாதது. என்ற தத்துவத்தை உணர்த்தி மறைந்து போகும். எல்லாமே ஒரு நாள் அழிந்து போகும். தோன்றியது எதுவும் நிரந்தரமானதல்ல. அதேபோல் ஆக்கப்பட்டது எதுவும் என்றோ ஒரு நாள் அழிந்து போகும். இந்த உலகும் அவ்வாறுதான். கொவிட்-19 உட்பட அமெரிக்காவின் நச்சத்திரப் போர்த் திட்டம், சீனாவின் முத்துமாலைத் திட்டம எல்லாமே என்றோ ஒரு நாள் அழிந்து போகும்.

ஒருவருக்குக் கிடைக்கும் பதவியும் புகழாசையும் கர்வமும் அவரின் சுயத்தை மறைத்து நான் என்ற அகம்பாவத்தை உருவாக்கி விடுவதனால் அவருடைய பின் மூளையின் செல்வாக்கு மேலோங்குகிறது. மனிதனுள் இருக்கும்  குணத்தை மனிதன் பாதி, மிருகம் பாதி என இருவகைப் படுத்துகின்றனர் உளவியலானர்களும் சமூகவியலளர்களும். இவை இரண்டும் ஒரு மனிதனுக்குன்ளேயே அடங்கியிருக்கும். அவனிடம் மனித குணங்களும் (நற்குணம்) மிருக குணங்களும் (தீய குணம்) காணப்படுகின்றது. நல்ல குணத்தை மேலோங்கச் செய்து, பண்பாடு, பழக்க வழக்கம், ஒழுக்க விழுமியம், சமய சிந்தனைகள், தியானம் என்பவற்றுக்கூடாக மிருக குணத்தைக் கட்டுப்படுத்திச் சமூகத்தில் நல்ல மனிதனாக வாழ்வதற்குரிய பக்குவத்தை வழங்குகிறது. நமது வாழ்க்கையில் தினமும் நேர், எதிரான செயற்பாடுகளைக் கண்டு அனுபவித்துக் கொண்டிருக்கிறோம். மனிதனிடம் காணப்படும் நேரான மனப்பாங்கு மனித குணத்தையும், எதிரான மனப்பாங்கு மிருக



குணத்தையும் வெளிப்படுத்தப்படுகின்றன. எதிரான செயற்பாடுகளுக்குச் சக்தி அதிகம் என்பதால் மிக வேகமாகச் செயற்பட்டு மிருக குணம் வெளிப்படுத்தப்படும். இந்த வகையில் பார்க்கும்போது பலரிடம் மிருக குணங்களே மேலோங்கிக் காணப்படுவதை அவதானிககலாம். எமது மூளையின் முன்பக்கம் மனித குணத்தையும் பின்பக்கம மிருக குணத்தையும் வெளிக்காட்டத் தக்கவாறு மூளை அமைந்திருப்பதாக விஞஞானிகளும், உளவியலாளர்களும் தமது ஆய்வின் மூலம் வெளிப்படுத்தியுள்ளனர். இன்று பெரும்பாலானோர் உணர்ச்சிகளுக்குக் கட்டுப்பட்டு நடைமுறை வாழ்கையில் மிருக குணத்தை வெளிக்காட்டி நோயாளிகளாக வாழ்கின்றனர். இத்தகையோர் ஆயுள் குறைந்தவர்களாக இருப்பர் என ஆய்வுகள் வெளிப்படுத்தி உள்ளன.

வாழ்வில் ஒருவர் சலனமில்லாமல், சஞ்சலமில்லாமல் பதட்டமில்லாமல் இருக்கும்போது தமது கடமையிலும் செயற்பாடுகளிலும் அர்ப்பணிப்பு, ஈடுபாட்டுடன் செயற்படுவார். அவர் சுயபுத்தியோடு செயற்படுவார். அவரிடம் நல்லொழுக்கமும் பாரபட்சமில்லாத நேரான மனநிலையும் காணப்படும். அவர் வாழ்நாளில் நோயற்ற வாழ்வு வாழ்வார். இத்தகைய பண்புகளே சகலரிடமும் எதிர்பார்க்கப்படுகின்றன. அயன மண்டல நாடுகளில் பெரும்பாலானோரிம் இத்தகைய பண்புகள் குறைவாகவே காணப்படுகின்றன. அதற்குக்



காரணம் அயன இந்நாடுகளில காணப்படும் அதிகரித்த வெப்பம் உடல், உள பீதியாகப பல தாக்கங்களை ஏற்படுத்துகின்றன. இந்நாடுகளில் வாழும் பலரிடம் கோபம், மூர்க்கத்தனம், பொறாமை, வஞ்சகம், சூது, வாது, கபடத்தனம், வரட்டுப் பிடிவாதம் ஆகியன மேலோங்கிக் காணப்படும். இதில் ஒன்றாக இந்நாடுகளில் வாழ்கின்ற பெண் பிள்ளைகளில் பெரும்பாலானோர் சிறு வயதில் பூப்படைதலைக் குறிப்பிடலாம். இளம் வயதில் பூப்படைவதற்குப் பல காரணங்கள் இருந்தாலும் காலநிலை வெகுவாகச் செல்வாக்குச் செலுத்துகின்றன. இவர்கள் மன இச்சைகளுக்கு வரைவாக ஆட்படுபவர்களாகவும் காணப்படுவர். மன உறுதியும், திடகாத்திரமும், சுயபுத்தியும் இல்லாதவர்கள் போல, ஒப்ப, புரைய என்றவாறே வாழ்க்கையை அமைத்துக் கொள்வர்.

போல, ஒப்ப, புரைய என்பதை தமிழ் இலக்கஒ நூலான நன்னூல; உவமை உருபுகளாகவே சுட்டி நிற்கின்றது. இவை தமிழ் மொழியில் ஒன்றை ஒப்பிடுவதற்கும் அதன் உண்மைத் தன்மையை வெளிப்படுத்துவதற்கும் பயன்படுத்தப்படுகினறன. ஒப்பிட்டுக் கூறுவதற்குப் பயன்படுத்தப்படும் உவமை உருபுகள் சிலரின் வாழ்க்கையை ஒப்பிடவும் பலரின் வாழ்க்கையையும் பல குடும்பங்களைச் சீரழிப்பதற்கும் பயன்படுத்தப்படுகின்றன. நல்ல நோக்கத்துக்காகப் பயன்பட்டு வந்த உவமை உருபுகள் சுயபுத்தி இல்லாதவரின் கைப்பட்டுப் படாதபாடு பட்டுக் கொண்டிருக்கிறது.

இன்று பெரும்பாலானோர் வேடமிட்டுப் பொய் முகங்களுடன் வாழ்ந்து கொண்டிருக்கினறனர். தனிப்பட்ட வாழ்க்கையில், குடும்பத்தில், சமூகத்தில், தொழில் தலத்தில் என வெவ்வேறு முகங்களை வெளிக்காட்டி கொண்டிருக்கினறனர். எவரொருவர் மேற்குறிப்பிட்ட நான்கு இடங்களிலும் பல்முகங்காட்டாது உண்மையோடு வாங்கின்றாரோ அவரே உத்தமனாகின்றார். அவ்வாறானவர்களை நடைமுறையில் காண்பது மிக அரிதாகும். இன்னும் பலர் மாபெரும் நடிகர், நடிகைகளாகச் சமூகத்தில் நடமாடிக் கொண்டிருப்பதை காணமுடிகிறது. தனிப்பட்ட வாழ்க்கை, குடும்பம், சமூகம், தொழில் தலம் என்பவற்றில் பல பிரச்சினைகள் உருவாகுவதற்கும், அவை சில வேளைகளில் விஸ்வரூபம் எடுத்து முறைமையை ஆட்டங்காண வைப்பதற்கும் போல, ஒப்ப, புரைய பயன்படுத்தப்படுகின்றன. அவற்றை நல்ல நோக்கத்தோடு ஒப்பிடுவதற்குப் பயன்படுத்தினால் சகலமும் விருத்தியடைய வாய்ப்புள்ளது. ஆனால், இன்று பெரும்பாலான குடும்பங்களில் எதிர்மறையான சிந்தனைகளோடு பயன்படுத்தப்படுவதனால் பெரும்பாலான தமிழ் குடும்பங்களில் சந்தோசமான, மகிழ்ச்சியான, நிம்மதியான வாழ்க்கை பாதிக்கப்பட்டுப் பல குடும்பங்கள் பனிப்போர் நிலையில் முரண்பாடுகளுடன் வாழ்க்கையை நடத்திக் கொண்டிருக்கினறனர்.

பலர் வாழ்கை வாழ்வதற்கே என்பதனை மறந்து மனம் போன போக்கில் வாங்ந்து கொண்டிருக்கினறனர். நல்ல குடும்பம் ஆனந்தமான பல்கலைக் கழகமாக இருக்கும். ஆனால், இன்றோ போல, ஒப்ப, புரைய என்கின்ற உவமிப்புக்கு முக்கியத்துவம் பொடுத்து வாழ்க்கையில் சந்தோசம், மகிழ்ச்சி, நிம்மதியைத் தொலைத்து அமைதியான குடும்ப வாழ்க்கையைக் கேள்விக் குறியாக்கிக் கொண்டிருக்கினறனர். இன்று நாம் நினைத்தது கிடைத்துவிட்டால் சந்தோசம், அச்சந்தோசம் பல நாட்களுக்கு நீடித்தால் மகிழ்ச்சி. அம்மகிழ்ச்சி வாழ்கை முழுவதும் நீடித்தால் அதுதான் நிம்மதியான வாழ்க்கையாகும். அத்தகைய வாழ்க்கையே சிறந்த, போற்றத்தக்க வாழ்க்கையாகும்.

இன்று பலர் வரவுக்கேற்ற செலவு செய்வதில்லை. கடன் வாங்கியாவது செலவு செய்வதில் குறியாக இருக்கினறனர். அவர்கள் 'விரலுக்கேற்றதுதான் வீக்கம்' என்ற முதுமொழியை மறந்து செயற்படுகின்றனர். வரவுக்கேற்ற வாழ்க்கையை விடுத்துச் செலவுக்கேற்ற வாழ்கை என வாழ்க்கையை நடாத்துகின்றனர்.

அடுத்த வாரம் தொடரும்....



# வீட்டுப் பராமரிப்பால் சொந்த வீட்டிலேயே தொடரும் சுதந்திரமான வாழ்க்கை

சுவிட்சர்லாந்தில் முதுமை மற்றும் நீண்ட கால நோய்களால் அன்றாட உதவி தேவைப் படும் பலர், Spitex வீட்டுப் பராமரிப்புச் சேவையின் உதவியுடன் பராமரிப்பு இல்லங் களுக்குச் செல்லாமல் தங்களது சொந்த வீடு களிலேயே வாழ்ந்து வருகின்றனர்.

மருந்துகளை வழங்குதல், உடலைச் சுத்தப்ப டுத்துதல், இரத்தச் சர்க்கரையைப் பரிசோதித் தல், இன்சுலின் ஊசி செலுத்துதல், மருத்துவக் காலுறைகளை அணிவித்தல் மற்றும் உணவு தயாரித்தல் போன்ற பல்வேறு சேவைகளை Spitex பணியாளர்கள் வழங்குகின்றனர். தேவைக்கேற்ப பொருட்களை வாங்குதல் மற் றும் வீட்டுப் பணிகளிலும் உதவி செய்யப்படு கிறது.



சொந்த வீட்டில் வாழ்வதையே விரும்பும் பலர்

உடல்நிலை பாதிக்கப்பட்டிருந்தாலும், தங் களது சொந்த வீட்டில் சுயமாக முடிவெடுத்து வாழ்வதே பலரின் முக்கிய விருப்பமாக உள்ளது. பராமரிப்பு இல்லங்களில் குறிப்பிட்ட நேர அட்டவணை மற்றும் நடைமுறைகளைப் பின்பற்ற வேண்டியிருக்கும் என்பதால், முடிந் தவரை வீட்டிலேயே வாழவே அவர்கள் விரும் புகின்றனர். வீட்டுப் பராமரிப்பின் உதவியால் நோயாளிகள் குடும்ப நினைவுகள் நிறைந்த சூழலில் வாழவும், செல்லப்பிராணிகளைப் பராமரிக்கவும், பால்கனி அல்லது தோட்டத்தில் நேரம் செலவிடவும் முடிகிறது. இது அவர்களின் மனநலத்திற்கும் வாழ்க்கைத் தரத்திற்கும் முக்கி யமானதாகக் கருதப்படுகிறது.

தனியாக வாழும் முதியவர்களுக்கும் நோயா ளிகளுக்கும் Spitex பணியாளர்கள் மருத்துவ உதவியாளர்களாக மட்டுமன்றி, அன்றாடம் சந்தித்துப் பேசும் சமூகத் தொடர்பாகவும் மாறு கின்றனர். சிலருக்கு வார நாட்களில் அவர்கள் குடும்ப உறுப்பினர்களைப் போன்ற நெருக்க மான ஆதரவாக உள்ளனர்.

**மற்றவர்களின் உதவியை ஏற்க வேண்டிய நிலை**

நீண்டகால நோய் அல்லது உடல் இயக்கக் குறைபாட்டுடன் வாழ்பவர்கள் குளித்தல், உடை



அணிதல் மற்றும் மருத்துவத் தேவைகளை நிறைவேற்றுதல் போன்ற தனிப்பட்ட செயல்களுக்குக்கூட மற்றவர்களின் உதவியை நாட வேண்டியுள்ளது.

ஆரம்பத்தில் இது தயக்கம் மற்றும் மனச்சங்கடத்தை ஏற்படுத்தக்கூடும். ஆனால் காலப் போக்கில் உதவியை ஏற்றுக்கொள்வது சுயமரியாதையை இழப்பதல்ல; மாறாக, சுதந்திரமான வாழ்க்கையைத் தொடர்ந்து நடத்துவதற்கான வழியாகப் பார்க்கப்படுகிறது.

**வீட்டுப் பராமரிப்புக்கும் வரம்புகள் உள்ளன**

Spitex சேவை வீட்டில் வாழ்வதைச் சாத்தியமாக்கினாலும், அதற்கும் சில வரம்புகள் காணப்படுகின்றன. எல்லாப் பகுதிகளிலும் இரவுநேரப் பராமரிப்புச் சேவை கிடைப்பதில்லை. அவசரநிலை ஏற்பட்டால் சம்பந்தப்பட்ட நபர் அல்லது அவரது உறவினர்கள் அம்புலன்ஸை அழைக்க வேண்டியிருக்கும்.

உடல்நிலை மேலும் மோசமடைந்து 24 மணிநேர கண்காணிப்பு தேவைப்படும் நிலை ஏற்பட்டால், வீட்டில் தொடர்ந்து வாழ முடியுமா என்ற கேள்வியும் எழுகிறது. இருப்பினும், எதிர்காலத்தைப் பற்றிய அச்சத்துடன் வாழ்வதைவிட தற்போதைய சுதந்திரமான வாழ்க்கையை அனுபவிப்பதே முக்கியம் எனப் பலர் கருதுகின்றனர்.

**ஆண்டுக்கு 3.63 பில்லியன் பிராங்குகள் செலவு**

சுவிட்சர்லாந்தில் Spitex சேவைகளுக்காக ஆண்டுதோறும் சுமார் 3.63 பில்லியன் சுவிஸ் பிராங்குகள் செலவிடப்படுகின்றன.

மருத்துவரால் பரிந்துரைக்கப்படும் மருந்து வழங்குதல், உடல் பராமரிப்பு உள்ளிட்ட மருத்துவச் சேவைகளின் ஒரு பகுதியை அடிப்படை மருத்துவக் காப்புறுதி ஏற்றுக்கொள்கிறது. ஆனால் வீட்டுப் பணிகள், அன்றாடத் துணை, சமூகப் பராமரிப்பு மற்றும் உரையாடலுக்காகச் செலவிடப்படும் நேரம் போன்றவற்றிற்கு அடிப்படை மருத்துவக் காப்புறுதி பொதுவாகப் பணம் செலுத்துவதில்லை.

இதனால் மருத்துவக் காப்புறுதி, அரசு அமைப்புகள், நகராட்சிகள், குடும்பத்தினர் மற்றும் சேவையைப் பெறுபவர்கள் ஆகியோருக்கிடையில் செலவுகள் பகிர்ந்துகொள்ளப்படுகின்றன.

Spitex வீட்டுப் பராமரிப்பு என்பது வெறும் மருத்துவச் சேவை மட்டுமல்ல. முதுமை அல்லது நோயின் மத்தியிலும் ஒருவர் தனது பழக்கமான சூழலில், கண்ணியத்துடனும் அதிகபட்ச சுதந்திரத்துடனும் வாழ உதவும் முக்கியமான சமூகச் சேவையாக அது விளங்குகிறது.





# ADHS குழந்தைகளிடமிருந்து உறவினர்கள் விலகுவது ஏன்?

அஊஏகு பாதிப்புடைய குழந்தைகளின் குடும்ப வட்டாரத்திலிருந்து சிலர் காலப் போக்கில் விலகிச் செல்வது அரிதான விடயமல்ல என elpos Schweiz என்ற அஊஏகு அமைப்பு தெரிவித்துள்ளது.

அமைப்பின் இணை நிர்வாக இயக்குநர் குதண்ச்ணணது குணீச்டூடிணஞ்னுனூ கூறுகையில், அஊஏகு ஒரு குழந்தையின் அன்றாட நடவடிக்கைகளை எவ்வாறு பாதிக்கிறது என்பது பலருக்குத் தெரிவதில்லை என்றார்.



திடீரெனச் செயல்படுதல், தீவிரமான உணர்ச்சிகளை வெளிப்படுத்துதல், அதிகமாகப் பேசுதல், மற்றவர்கள் பேசும்போது இடைமறித்தல் மற்றும் உடன்பாடுகளைப் பின்பற்றுவதில் சிரமம் போன்ற நடத்தைகள் உறவுகளில் சவால்களை ஏற்படுத்தலாம்.

இத்தகைய நடத்தைகள் சில நேரங்களில் மோசமான வளர்ப்பு, மரியாதையின்மை அல்லது வேண்டுமென்றே செய்யப்படும் செயல் என்று தவறாகப் புரிந்துகொள்ளப்படுகின்றன.

ஒரு குழந்தையின் சில நடத்தைகள் சவாலானவையாக இருக்கலாம். ஆனால், அதற்காக அந்தக் குழந்தையையே மதிப்பிழக்கச் செய்யக்கூடாது என்று நிபுணர் வலியுறுத்தியுள்ளார்.

நம்பகமான உறவுகள் மிகவும் முக்கியம்

அஊஏகு குழந்தைகளுக்கு நெருங்கிய குடும்பத்திற்கு வெளியே இருக்கும் நம்பிக்கைக்குரிய பெரியவர்களின் ஆத



ரவு மிகவும் முக்கியமானது.

ஞானத்தந்தை அல்லது ஞானத்தாய் போன்றவர்கள் குழந்தையின் திறமைகளை அடையாளம் கண்டு, நேரத்தைச் செலவிட்டு, தொடர்ச்சியான அன்பையும் பாதுகாப்பையும் வழங்க முடியும்.

அஈஏகு குழந்தைகள் அன்றாட வாழ்க்கையில் அதிகமான திருத்தங்களையும் எதிர்மறையான விமர்சனங்களையும் எதிர்கொள்வதாக நிபுணர்கள் தெரிவிக்கின்றனர். அவர்களுக்கு நெருக்கமான ஒருவரும் திடீரென விலகிச் சென்றால்,

நான் மிகவும் தொந்தரவானவனா?

என்னிடம்தான் ஏதோ தவறு இருக்கிறதா?

என்ற எண்ணங்கள் குழந்தையின் மனதில் உருவாகலாம்.

எனவே, சில நேரங்களில் எல்லாம் எளிதாக இல்லாவிட்டாலும், நீ எனக்கு முக்கியமானவன்; நான் உன்னைப் புரிந்துகொள்கிறேன் என்ற உணர்வை வழங்கும் உறவுகள் குழந்தையின் தன்னம்பிக்கை, பாதுகாப்புணர்வு மற்றும் சமூகத்துடன் இணைந்திருக்கும் உணர்வை வளர்க்கின்றன.

**இணையத் தேடலில் பாதுகாப்பு குறித்த கவலை**

தாயின் Facebook பதிவுக்குப் பலர் பதிலளித்துள்ளனர். ஆனால், அறிமுகமில்லாத நபரைச் சிறுவனுடன் தொடர்புபடுத்துவதில் மிகுந்த எச்சரிக்கை தேவை எனப் பல பயனர்கள் எச்சரித்துள்ளனர்.

சிலர் ஆர்வம் தெரிவித்த போதிலும், அவர்களில் சிலர் சந்தேகத்திற்குரிய நபர்களாகத் தோன்றியதாகத் தாய் கூறியுள்ளார். இதுவரை பொருத்தமான மற்றும் நம்பகமான ஞானத்தந்தை கிடைக்கவில்லை.

ஒரு நல்ல ஞானத்தந்தையைக் கண்டுபிடிப்பது நான் நினைத்ததைப் போல எளிதாக இல்லை எனத் தெரிவித்துள்ள அந்தத் தாய், தனது மகனைப் புரிந்துகொண்டு அவனுடன் நேரத்தைச் செலவிடக்கூடிய நம்பகமான ஒருவரைத் தொடர்ந்து தேடி வருகிறார்



# இளம் ஆன்மீகச் சொற்பொழிவாளரான நாகராஜா சனாதனனுக்கு சுவிசில் கௌரவிப்பு


கல்முனையைச் சேர்ந்த இளம் ஆன்மீகச் சொற்பொழிவாளரான நாகராஜா சனாதனன், சுவிட்சர்லாந்தின் சூரிச் நகரில் அமைந்துள்ள விஷ்ணு துர்க்கை அம்மன் ஆலயத்தில் ஆன்மீகச் சொற்பொழிவாற்றுவதற்காக ஆலய அறங்காவலர் சபையினரின் விசேட அழைப்பின் பேரில் சுவிட்சர்லாந்து வந்துள்ளார்..

இந்நிலையில், சுவிட்சர்லாந்தில் வாழும் கல்முனைப் பிரதேச மக்களின் சார்பில், நாகராஜா சனாதனனுக்கு பொன்னாடை போர்த்தி கௌரவம் வழங்கப்பட்டது. இந்நிகழ்வு கல்முனை மக்களுக்கும் பெருமை சேர்க்கும் நிகழ்வாக அமைந்தது. இளம் வயதிலேயே தனது ஆழமான ஆன்மீக அறிவாலும் எளிமையான சொற்பொழிவு நடையாலும் பலரது பாராட்டைப் பெற்றுவரும் நாகராஜா சனாதனனின் இந்த வெளிநாட்டு ஆன்மீகப் பயணம், உலகத் தமிழர்களிடையே அவரது ஆன்மீகப் பணிக்கு மேலும் சிறப்பையும் அங்கீகாரத்தையும் பெற்றுத் தரும் என பலரும் கருத்து தெரிவித்துள்ளனர்.









# குருமகான் அவர்களின் சுவிற்சலாந்து வருகையும்

## மக்கள் மனதில் ஏற்பட்ட ஆனந்த அலைகளும்



சுவிற்சலாந்திலிருந்து நல்லதம்பி சரவணப்பெருமாள்

காலம்காலமாக எண்ணரிய ஞானிகளும் சித்தர்களும் பாரதநாட்டில் அவதரித்து மனிதகுல ஈடேற்றத்திற்கு வழிகாட்டிகளாக திகழந்து மனித வாழ்வை செம்மைப்படுத்தி மேன்மையுற செய்து வந்துள்ளார்கள். அவர்களை தொடர்ந்து இன்றைய உலகில் ஞான வள்ளல் பரஞ்சோதிமகான் அவர்களுடைய சீடரும் தென்கயிலை திருமூர்த்திமலையில் உள்ள உலக சமாதான ஆலயம் ஸ்தாபகரும் உலக சமாதான தூதுவருமாகிய குருமகான் அவர்களுடைய யோகா பயிற்சி வகுப்பும் அதனை தொடர்ந்து சத்சங்க நிகழ்வும்

சுவிற்சலாந்து நாட்டில் சூரிச் மாநகரில் கடந்த சனி ஞா

யிறு ஆகிய தினங்களில் யோகா பயிற்ச்சி கலைகளும் அதனை தொடர்ந்து சத்சங்க நிகழ்வும் இடம்பெற்றது.

சூரிச் நிகழ்வுகளை தொடர்ந்து திங்களன்று காலைவேளையில் ஒஸ்ரியா நாட்டிலுள்ள தீபத்திய மததலைவர் தவத்திரு தலாய் லாமா அவர்களின் பௌத்த மத ஆச்சிரமத்திற்கு விஜயத்தினை மேற்கொண்டு அங்கேயுள்ள பௌத்தமத துறவிகளுடன் உரையாடி தியானத்தினை மேற்கொண்டிருந்தார். திங்களன்று பிற்பகல் செங்காலன் மாநிலத்திலுள்ள ஓர் மண்டபத்தில் செங்காலன் கதிர்வேலாயுதசுவாமி ஆலய முன்னைநாள் தலைவரும்; அணைத்துலக முருகபக்தி ஏற்பாட்டாளருமாகிய திரு வேலுப்பிள்ளை கணேசகுமார் தலைமையில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த வேல்வழிபாட்டு நிகழ்விலும் கலந்து கொண்டு சிறப்பித்தமை குறிப்பிடத்தக்கது.

பாரதியார் பாடலொன்றில்

ஷஷ விசையுறு பந்தினைப்போல் உள்ளம்
வேண்டிய படி செல்லும் உடல் கேட்டேன்
நசையறு மனம் கேட்டேன் நித்தம்
நவமெனச் சுடர்தரும் உயிர்கேட்டேன்
தசையினை தீசுடினும் சிவ
சக்தியைப் பாடும் நல் அகங் கேட்டேன்
அசைவறு மதிகேட்டேன் இவை



அருள்வதில் உனக்கேதுந் தடையுள தோ?

பாரதியார் பாடலுக்கேற்ப ஓர் மனிதன் ஆனந்தமாக வாழ்வதற்கு நல்ல உடல் இஅலைபாயாத மனம்,ஆற்றல் மிக்க உயிர்,வைராக்கியமான பக்தி,அசை வற்ற புத்தி ஆகிய ஐந்து விடயங்கள் அமைந்திருந்தால் மட்டுமே அவ்ம னிதன் ஆனந்தமாக வாழமுடியும். எனவே யோக பயிற்சியின் விளைவாக நல்ல ஆரோக்கியமான உடல்,தெளிவு குருவின் திருவார்த்தைகளை செவி மடுப்பதன் மூலமாக மனம் ,புத்தி தூய்மைபெற்று ஆனந்தமான வாழ்க் கையை ஐயமின்றி குருமகான் அவர்க ளுடைய நிகழ்ச்சியில் பங்கேற்றவர்கள் அணைவரும் பெற்றிருப்பார்கள் என ஆணித்தரமாக கூறலாம்.

யோக பயிற்சியில் பங்கேற்ற அணை வருக்கும் குண்டலினி யோகா, பிரா ணாயாமபயிற்சி, ஜீவரட்சகா போன்ற முக்கியமான பயிற்சிகளும் பயிற்றுவித் ததுடன் குருமகான் அவர்களுடைய சத்ச ங்கமும் இடம்பெற்று முடிவில் நிகழ்வில் பங்கெடுத்த அணைவருக்கும் சான்றி தழ்களும் வழங்கி கௌரவிக்கப்பட்டார் கள்.

இவ் நிகழ்வுகளை தொடர்ந்து அடுத்த நாள் திங்கட்கிழமை பிற்பகல் ஏழுமணி யளவில் செங்காலன் மாநிலத்தில் வேல்வழிபாட்டு நிகழ்வில் கலந்து உரை யாற்றியதுடன் அங்கு வந்திருந்தவர் களுக்கு ஆசீர்வாதமும் வழங்கியிருந் தார்கள் அவர் தமதுரையில் வேலின் தத்துவம் , மனிதர்கள் வாழ்வில் அறிய வேண்டிய ஆன்மீக கருத்துகள் மிகவும் அழகான முறையில் சிறிய உதாரணங் களுடன் விளக்கி நகைச்சுவை ததும்ப பேசி அணைவரையும் கவர்ந்திருந் தமை குறிப்பிடத் தக்க விடயமாகும். நிகழ்வின் ஆரம்ப நிகழ்வாக108 வேல் போற்றி பாராயணம் செய்யப்பட்டு

குருமகான் அவர்களுடைய பிரபஞ்ச நலவாழ்த்தும் பாடப்பெற்று விழா மங்களகரமாக ஆரம்பமாகியது.

இந்நிகழ்வின் முக்கிய அம்சமாக முருகபெருமானின் ஆறுபடை வீடுக ளில் ஒன்றான பழனியில் பதிணென் சித்தர்களில் ஒருவரான போகர் நவபா சானத்தை பயன்படுத்தி பழனிமுருகன் சிலையை வடிவமைத்தார் என்ற செய் தியை பழனிதலவரலாற்று நூல் தெரி விக்கிறது .இதனால் பழனி முருகனுக்கு அபிசேகம் செய்யப் படுகின்ற தீர்த்த மானது பலவித வியாதிகளை குணப் படுத்த வல்ல மருத்துவ தன்மையுடை யது. இதே போன்று இந்த வழிபாட்டில் பயன்படுத்திய வேலும்

நவபாசானத்தைக் கொண்டு உரு வாக்கி குருமகான் அவர்களின் தியான மண்டபத்தில் வைக்கப்பெற்று சுவிற்ச லாந்திற்கு எடுத்து வரப்பட்டு வழிபாடு நடைபெற்ற செயல் முருனுடைய கரு ணையே தவிர வேறில்லை.

‘‘லோகா சமஸ்தா சுகினோ பவந்து,’’

# நடுக்காட்டில் மனிதாபிமான சேவை: நாவலடியில் இருவாரங்கள் இடைவிடாத மருத்துவச் சேவை!



( வி.ரி.சகாதேவராஜா)

வரலாற்று பிரசித்தி பெற்ற கதிர்காமம் கந்தன் ஆலயத்திற்கு கானகத்தினூடாக செல்லும் அடியார்களுக்கு மனிதாபிமான சேவையை ஒரு மருத்துவ குழு தொடர்ச்சியாக பல வருடங்களாக வழங்கி வந்தது.

உகந்தை மலை முருகன் ஆலயத்திலிருந்து சுமார் 80 கிலோமீட்டர் தொலைவிலுள்ள நாவலடியில் சமுதாய சுகாதார விசேட வைத்திய நிபுணரும் முன்னாள் கிழக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளருமான வைத்திய கலாநிதி அழகையா லதாகரன் தலைமையிலான மருத்துவசேவை அணியினர் இம்முறையும் இரண்டு வார காலம் அதே சேவையை செய்தார்கள்.

ஆயிரக்கணக்கான பக்தர்கள், கொழுத்தும் வெயில், புழுதி, கரடுமுரடான பாதைகள் மற்றும் பல்வேறு இயற்கைச் சவால்களைத் தாண்டி வரும் போது உடல் சோர்வு, உளச்சோர்வு, கால்காயங்கள் உள்ளிட்ட பல்வேறு உடல்நலப் பிரச்சினைகளுடன் அவர்கள் நாவலடியை வந்தடைகின்றனர்.

அரசின் அனுமதியுடனும் பல்வேறு நலன்புரி பங்காளிகளின் ஒத்துழைப்புடனும், பல ஆண்டுகளாக நாவலடியில் மருத்துவ முகாமை அமைத்து பக்தர்களுக்கான அர்ப்பணிப்பு சேவையை தொடர்ந்து வழங்கப்பட்டது.

இவ் வாண்டு காட்டுப்பாதை திறக்கப்படுவதற்கு இரண்டு நாட்களுக்கு முன்னதாகவே, அதாவது ஜூலை 8 ஆம் திகதி நாவலடியில் முகாமிட்ட குழுவினர் தேவையான அனைத்து ஏற்பாடுகளையும் மேற்கொண்டனர்.

பின்னர் 10.07.2026 அன்று காட்டுப்பாதை திறக்கப்பட்டதிலிருந்து, யாத்திரை நிறைவடைந்த 24.07.2026 வரை முழு இரண்டு வாரங்கள் இரவு பகலாக இடைவிடாத மருத்துவச் சேவையை அர்ப்பணிப்புடன் வழங்கினர்.

ஒவ்வொரு நாளும் காலை 7.00 மணி முதல் பக்தர்களின் வருகைக்கு ஏற்ப தொடர்ச்சியாக மருத்துவ சேவை வழங்கப்பட்டதுடன், மூலிகைத் தேநீர், சிற்றூண்டி போன்றவையும் வழங்கப்பட்டன.

இந்த மகத்தான பணியில் 15-க்கும் மேற்பட்ட சேவையாளர்கள் சுழற்சி முறையில் இடைவிடாது ஈடுபட்டு வருகின்றனர். சில சந்தர்ப்பங்களில் ஆளணி பற்றாக்குறை ஏற்பட்டபோது, வனபரிபாலன திணைக்கள அதிகாரிகள், உயர் அதிகாரிகள், இலங்கை இராணுவத்தின் அதிகாரிகள் மற்றும் வீரர்கள் தன்னார்வமாக இணைந்து சேவையாற்றினர்.

பக்தர்கள் பயன்படுத்திவிட்டு வீசிச் செல்லும் பொலித்தீன், பிளாஸ்டிக் கழிவுகள் மற்றும் சமைத்துவிட்டு அணைக்கப்படாமல் விடப்படும் நெருப்பினால் காட்டிற்கு ஏற்படும் ஆபத்துகளை எடுத்துரைக்கும் வகையில் ஒலிபெருக்கி மூலம் தொடர்ந்து விழிப்புணர்வு ஏற்படுத்திய அதேவேளை, ஒவ்வொரு காலையிலும் சேவையாளர்கள் தாமாக முன்வந்து அப்பகுதியை சுத்தம் செய்து சிரமதானப் பணிகளில் ஈடுபட்டனர்.

இந்த முயற்சியில் இராணுவத்தினரும் இணைந்து கழிவுகளை அகற்றி துப்புரவுப் பணிகளை மேற்கொண்டனர்.



# தலவாக்கலையில் வேல்ட் விஷன் நிறுவனத்தினால் விழிப்புணர்வு பேரணி!








தலவாக்கலை வேல்ட் விஷன் நிறுவனத்தினால் சிறுவர்கள் மற்றும் குடும்பங்களின் உகந்த ஊட்டச்சத்தை உறுதி செய்வதையும், வன்முறையற்ற ஆரோக்கியமான எதிர்காலத்தை இணைந்து கட்டியெழுப்புவதையும் நோக்கமாகக் கொண்டு, தலவாக்கலை நகரில் பிரம்மாண்ட விழிப்புணர்வு பேரணி மற்றும் வீதி நாடகம் மற்றும் ஸ்டிக்கர் பிரச்சார நடவடிக்கை நிறுவனத்தின் அதிகாரி ஷிகா சமர்த்துங்க தலைமையில் முன்னேடுக்கப்பட்டது.

லிந்துலை பிரதேச அபிவிருத்தி திட்டத்தின்(Lindula Area Development Programme) ஏற்பாட்டில், ''போதும் பிரச்சாரம்'' (Enough Campaign)எனும் மக்கள் விழிப்புணர்வு இயக்கத்தின் கீழ் இந்நிகழ்வு ஒருங்கிணைப்பின் கீழ் மிகவும் சிறப்பாக நதைடபெற்றது.

தலவாக்கலை நகரத்திலிருந்து ஆரம்பமாகி , இலங்கை வங்கி சுற்றுவட்டார வழியாக தலவாக்கலை பஸ் நிலையத்தை சென்றடைந்ததுடன், நோக்கமும் அழைப்பும்:''வன்முறைக்கு 'போதும்' என்று முற்றுப்புள்ளி வைப்போம்!, நமது சமூகத்தின் முன்னேற்றத்திற்கும் ஆரோக்கியமான வளர்ச்சிக்கும் ஒன்றிணைந்து குரல் கொடுப்போம்!'' என்ற கருப்பொருளை மையமாகக் கொண்டு இப்பேரணி மற்றும் வீதி நாடகம் மற்றும் பொதுமக்கள் வன்முறைக்கு எதிராக உறுதியளிக்கும் வகையில் அமைக்கப்பட்ட கையெழுத்து இயக்கத்திலும் ஆர்வத்துடன் பங்கேற்றனர்.

இந்நிகழ்வில் சமூக அமைப்புகளின் பிரதிநிதிகள், மாணவர்கள், இளைஞர்கள் மற்றும் பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டு, வன்முறையற்ற, பாதுகாப்பான மற்றும் ஆரோக்கியமான சமூகத்தை உருவாக்க ஒன்றிணைந்து செயல்பட உறுதிமொழி எடுத்துக்கொண்டனர்.

சிறுவர்களின் பாதுகாப்பு, ஆரோக்கியம் மற்றும் உரிமைகளை உறுதிப்படுத்தும் இவ்வாறான விழிப்புணர்வு நடவடிக்கைகள், சமூகத்தில் நேர்மறையான மாற்றத்தை ஏற்படுத்தும் என்பதில் அனைவரும் நம்பிக்கை வெளியிட்டனர்.

